
# வைரவிழா நினைவுநிலை - ஜயரத்தினம் உருவச்சிலை திறப்பு விழா



# சிறப்பு மலர்



மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

1978-05-05



Horse Brand Galvanised Buckets, made of fine quality mild steel sheets and galvanised by our exclusive 'GALVEX' hot-dip process, are available in all popular sizes.

# HORSE BRAND
## GALVANISED BUCKETS

**Manufacturers:**

# ELBEHEM HOUSE

**53, PRINCE STREET, COLOMBO-11**

**Factory: MAVIDDAPURAM, TELLIPPALAI**

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
# வைரவிழா நினைவுநிலை
# ஜயரத்தினம் உருவச் சிலை
# திறப்பு விழாச் சிறப்பு மலர்

திருச்சிற்றம்பலம்

வாயானை மனத்தானை மனத்து ணின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருச்சிற்றம்பலம்

SOUVENIR OF THE
**CEREMONIAL OPENING OF THE**
DIAMOND JUBILEE MEMORIAL BLOCK
and the installation of the
JAYARATNAM STATUE

**MAHAJANA COLLEGE, TELLIPPALAI**

1978 – 05 – 05

# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன...... என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே.

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
**துரையப்** பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனும் மகாஜன சிற்பி
**ஜயரத் தினம்**பணி நினைவோம்.

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்.

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.


புலவர் நா. சிவபாதசுந்தரனுர்



சிவகாமி சமேத ஆனந்த நடராசர்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

மகாஜனு தந்த மாண்புறு செம்மல்




பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை




திருமதி தையல்நாயகம் துரையப்பாபிள்ளை

## நவ மகாஜனவின் சிற்பி



திரு. தெ. து. ஜயரத்தினம்




திருமதி .இராணிரத்தினம் ஜயரத்தினம்

வைரவிழா நினைவு நிலைக்கான
அடிக்கல் நாட்டியவர்



பழைய மாணவரும், தொழிலதிபருமாகிய
அமரர் திரு. ஆ. திருஞானசம்பந்தர்

வைர விழா நினைவு நிலை



## *Message*

*from*

**Hon. NISSANKA WIJEYERATNE**

*Minister of Education*

On the Occasion of the Opening of the

**Diamond Jubilee**

**Jayaratnam Memorial Block**

I have very great pleasure in sending this message on the occasion of your Diamond Jubilee Celebration. I am aware of the sacrifices made and the personal courage displayed by the late Mr. T. A. ThuraiappahPillai in founding this Institution in the best of noble traditions in 1910 during a period of considerable difficulties. His son the late Mr. T. T. Jayaratnam succeeded admirably in developing the high ideals cherished by his father and laid the foundation for the modern Mahajana College which today holds the distinguished position among other leading educational Institutions in our country. It is my firm conviction that Mahajana College will continue to maintain the highest traditions of Tamil culture and produce men of high calibre and noble ideals as we have done in the past.

*Nissanka Wijeyeratne*


*Minister of Education*

வைரவிழா நினைவு நிலையைத்
திறந்து வைப்பவர்




தேசியப் பேரவை எதிர்க்கட்சி முதல்வர்
மேதகு அ. அமிர்தலிங்கம்

ஜயரத்தினம் உருவச் சிலையைத் திறந்துவைப்பவர்



வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு. தி. மாணிக்கவாசகர்

ஜயரத்தினம் நினைவு கூடத்தைத்
திறந்து வைப்பவர்




பல்கலைக் கழக யாழ். வளாகத் தலைவர்
பேராசிரியர் சு. வித்தியானந்தன்

எங்கள் அதிபர்




திரு. பொ. கனகசபாபதி



மகாஜன சிற்பி தெ. து. ஜயரத்தினம்

## சிலைவடித்த சிற்பி



சிற்பக்கலாநிதி செ. சிவப்பிரகாசம்

# வெளியீட்டுரை

எமது மகாஜனக் கல்லூரியின் வைரவிழா 1970ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அவ் விழாவின் நினைவாக ஓர் உயர்நிலை மாடம் அமைத்தல் வேண்டுமென்பது, கல்லூரியின் முதல் அதிபராய், அதனை உயர்ந்த நிலைக்கு உயர்த்தியவராய், அதனால் 'மகாஜன சிற்பி' எனப் பாராட்டப் பெறுகின்றவராய் விளங்கிய அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களின் பெரு விருப்பமாகும். அவ் விருப்பத்தின் விளைவு எட்டு ஆண்டுகளின்பின் இன்று பூர்த்தியடைந்துள்ளது. அயராத ஊக்கமும், சலியாத உழைப்பும், பெரு நிதிக்குவையும் வேண்டப்பெற்ற காரணத்தால் இந்த 'வைரவிழா நினைவுநிலை' பூரணப் பொலிவுற இவ்வளவு நாட்கள் தேவையாயின.

நல்லோர் சிந்தையில் நலம்மிகத் தோன்றிய நல்லெண்ணங்கள் எல்லோரும் களிக்க இனிது நிறைவெய்தும் என்பதற்கு இந்த வைரவிழா நினைவு நிலை ஒரு பெருஞ் சான்றாகும். யாவரையும் திடுக்குறவைத்துத் திடீரெனத் தம் புவி வாழ்வை நீத்து அமரராகிய கல்லூரி முதல் முதல்வராம் ஜயரத்தினம் அவர்கள், தமது எண்ணக்கரு விரிந்து வளர்ந்து வண்ண உருப்பெறும் நிலையைக் கண்ணாரக் கண்டு களித்தார் என்பதை எண்ணியெண்ணி யாம் பெரிதும் உவக்கின்றோம். ஆயின், அவர் இந் நினைவு நிலையின் திறப்புவிழாவிற் கலந்து எம்முடன் குதூகலங்கொள்ளும் நிலை இல்லாமை ஒரு பெருங் குறையாகவே இருந்தது, அதனை ஈடுசெய்து, அவர் எம்முடனே என்றும் இருக்கின்றார் என்னும் நிலைமையை ஆக்க முனைந்தோம். எழுந்து நிற்கின்ற உயர்நிலை மாடப் புகு முகத்திலே மலர் முறுவலோடும் கருணையோடும் எம்மை நோக்குகின்றார் என்னும் எண்ணம் எமக்குத் தோன்றுமாறு அவர் உருவச்சிலையைத் தாபித்தோம், அதனோடமையாது மாடத்தமைந்த பெருமண்டபத்தை 'ஜயரத்தினம் நினைவு கூடம்' எனப் பெயரிட்டழைக்கவுந் தீர்மானித்துள்ளோம். இவ்வாற்றால் வைரவிழா நினைவு நிலைத் திறப்புவிழா, அமரர் ஜயரத்தினம் அவர்களை என்றும் நினைவுகூரும் பெருவிழாவாக அமைகின்றது.

1910ஆம் ஆண்டு இந்த நிலத்திலே சிறு பள்ளித் தலமொன்றை 'மகாஜன ஆங்கில உயர்நிலைப் பள்ளி' எனப் பெயரிட்டமைத்து, அது யாழ்நகர்ப் பெரிய கல்லூரிகளுக்கு இணையாகத் திகழுநாள் எந்நாள் வருமோ என்ற ஆசைக் கனவுகள் பூர்த்தியாகாத நிலையில், பல்லாண்டுகளின் முன் பாவலர் துரையப்பாபிள்ளையவர்கள் அமரராயினர்கள். அந்தத் தந்தையாரின் ஆசைக்கனவை நனவாக்கி, உயர்நிலைப் பள்ளியைக் கல்லூரித் தரத்துக் குயர்த்தி அவரது உருவச்சிலையையும் தாபித்துப் பெருமைப்படுத்தினர்கள் மைந்தராகிய அமரர் ஜயரத்தினம் அவர்கள். அதன்மேல், கல்லூரியைக் கட்டிடங்களால் விரிவுறச் செய்ய முயன்று அம் முயற்சி பலிதமுறும் வேளையில் அம் மைந்தரும் அமரரானார், எனவே, நாம் அம் மைந்தரது உருவச்சிலையையும், நினைவு கூடத்தையும் திறந்துவைத்து அவரை நினைவுகூர்தல் சால்புடைத்தேயன்றோ. எனவே, அத் திறப்பு விழாவைப் பெரு விழாவாக 1978ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் எடுக்கின்றோம். அமரர்களாய் விளங்கும் மைந்தரும் தந்தையும் தமது தாபனத்தின் உயர்நிலை கண்டு, தெய்வீக உடம்புடன் நின்று கழிபேருவகை கொள்வார்கள், ஆத்மசாந்தி பெறுவார்கள் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கை.

மகாஜனக் கல்லூரியிலே கல்விகற்பது தமது மதிப்பை உயர்த்தும் என்ற எண்ணத்திலே இங்கு கற்கை விழையும் மாணவர் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகின்றது. அவர்கள் விழைவைப் பூர்த்திசெய்து தன்னகத்தே அவர்களை

அடக்கிக்கொள்வதற்கு மகாஜனக் கல்லூரிக்கு, இந்த வைரவிழா நினைவுநிலை போன்ற 'பெருநிலைகள்' பல வேண்டப்படுகின்றன என்பதை நாம் உணர்கின்றோம். இந்த உணர்வின் செயலாக்கமாக நாம் ஓரளவு முன்னேறியுள்ளோம் என்பதை இந்த வைர விழா நினைவுநிலை எடுத்தியம்பிக்கொண்டு எழுந்து நிற்கின்றது. இதனைக் கட்டி எழுப்புவதில் நாம் கொண்ட பெரு முயற்சிகளும், சலியாத உறுதியும் இதன் பூர்த்திநிலை ஒய்ந்துவிட முடியாதவை. எமது தேவைகளோ மிகப் பல. ஆகவே, இந்நாள்வரை நாம் மேற்கொண்ட உழைப்பினும் பார்க்க அதிக அளவிலான முயற்சிகளும் உழைப்பும் வேண்டப்படுகின்றன என்பதை நாம் உணர்கிறோம்.

இன்று நிகழும் இத் திறப்புவிழா வைபவம் எமக்கு இன்பத்தையும், புதிய உற்சாகத்தையும் தருகின்றது. இந்நிலை ஓர் இலக்கை நோக்கி முன்னேறிய எமது இலட்சியப் பூர்த்தியால் வந்தது. இந்த இன்பத்தை நாம் அனுபவிக்க எமக்கு நல்கிய பெருமைக்குரியவர் எமது புதிய அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள். அவர் அதிபர் நிலையிற் புதியவராயினும், எட்டு ஆண்டுகளுக்குமுன் இங்கே கற்பித்த ஆசிரியராவார். தமது முதல் ஆசிரியப்பணியை மகாஜனத் தாயின் மலரடியிற் சமர்ப்பித்த காரணத்தால், தாய்ப்பாசம் மிக்கவராய் அன்னையின் உயர்நிலை காண, தம் சுகங்களை உதறி எறிந்து முன்னின்று உழைக்கின்றார். அவரது களிப்பெருந் தொண்டு காரணமாக இந்தக் கட்டிடம் இன்று உயர்ந்தோங்கி நிற்கின்றது.

எமது பழைய மாணவர்களும், அன்பரும் மனங் கோணாது பெருநிதியை உபகரித்த காரணத்தாலே, இந்த வைர விழா நினைவு நிலையும், ஜயரத்தினம் உருவச் சிலையும் ஆகியன பூர்த்திபெற்றுத் திறப்புவிழாக் காண்கின்றன. அவர்களுக்கு எமது நன்றி.

இந்தச் சிறப்பு மலர் இத் திறப்புவிழா நன்னாளில் உங்கள் அனைவரது கரங்களிலும் மலர்கின்றது. இதனை வெளியிடுவதற்கு நிதி உதவிய அன்பர்கள், கட்டுரைகள் தந்துதவிய அறிஞர்கள் யாவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

ஜயரத்தினம் உருவச்சிலையைக் கண்கவர் வனப்பில் வடிந்து நல்கிய சிற்பக் கலாநிதி செ. சிவப்பிரகாசம் அவர்களுக்கும் நாம் நன்றிக்கடன் பூண்டுள்ளோம்.

அன்பர் யாவரும் இந்த வைரவிழா நினைவு நிலையை உள்ளார்ந்த அன்புடன் வாழ்த்துதல் வேண்டுமென வேண்டி இவ் வெளியீட்டுரையை முடிவுசெய்கின்றோம்.

வணக்கம்.

**1978-05-05**

**மலர்க் குழுவினர்**

# நினைவு கூடம் எழுந்தது

பொ. கனகசபாபதி
அதிபர்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

**பிறந்த கதை :**

1968ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் ஒருநாள். எனது பெருமதிப்புக்குரிய அதிபர் தெ. து. ஜயரத்தினம் அவர்கள் என்னை அலுவலகத்துக்கு வருமாறு அழைத்திருந்தார். கல்லூரிப் பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலாளராக அந்நாளில் நான் பணிபுரிந்துகொண்டிருந்தேனுதலால், அந்தச் சங்கத் தொடர்பாக ஏதாவது கூறுவதற்காகத்தான் என்னை அழைக்கின்றார் போலும் என எண்ணிக்கொண்டே நான் அலுவலகத்தினுள் நுழைந்தேன்.

முகமலர்ச்சியோடு என்னை வரவேற்ற அதிபர் அவர்கள் தம் மனத்திலே அமைத்திருந்த ஒரு திட்டத்தை எனக்கு எடுத்துக் கூறினார்கள். ''இன்று மிகப் பிரபலம் வாய்ந்து விளங்கும் 'இராஜ் நகைச்சுவை நாடகக் குழுவினர்', எமது கல்லூரியில் தமது நாடகம் ஒன்றை மேடையேற்ற விரும்பினுர்கள். நானும் இசைவு கொடுத்து விட்டேன். அந்த நாடகத்திறைற் சேரும் பணத்தைக் கொண்டு கல்லூரி ஆலயத்துக்கு முற்புறத்திலே ஒரு 'கிறில் கேற்' அமைக்கலாம் என எண்ணுகிறேன்'' எனறுர் அவர். இவ்வாறு தமது திட்டத்தைக் கூறியபின் என் அபிப்பிராயத்தை எதிர்நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். நான் சிறிது பொழுது சிந்தித்தேன். அதன் பிறகு அவரது திட்டத்துக்குச் சார்பான பிறிதொரு கருத்தைத் தெரிவித்தேன்.

''1970ஆம் ஆண்டு எமது கல்லூரியின் வைர விழா ஆண்டாக அமைகின்றது. அவ்விழாவின் நினைவாக ஒரு புதிய மண்டபத்தை நாம் நிருமாணிப்பது தக்கதென நான் கருதுகிறேன். அதற்காக நாம் பெருந்தொகை நிதியைச் சேகரிக்க முனைதல் வேண்டும். இப்பொழுது நாம் நடத்துவிக்க இருக்கும் நாடகத்தின் மூலம் கிடைக்கும் நிதியை, அந்த வைரவிழா நினைவு மண்டப நிதிக்குரிய ஆரம்பத் தொகையாகக் கொண்டு எமது இலட்சியத்தை நோக்கி நாம் முன்னேறிச் செல்லலாம்'' என்று யான் கூறினேன். அதிபரவர்கள் அக்கணமே உடன்பட்டார்கள். எனவே, நாம் வைரவிழா நினைவுகூடம் ஒன்றை நிறுவுவதற்குரிய நிதி சேகரிப்பதற்கு ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு மிக்க விரைவிலே செயலாற்றத் தொடங்கினோம். 'இராஜ் நகைச்சுவை நாடகக் குழுவினரின்' நாடகமொன்றை மேடையேற்றுவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தோம். அதன்பின் அந்நாடக நுழைவுச் சீட்டுக்களை ஊர், ஊராகச் சென்று விற்பனை செய்வதெனத் தீர்மானித்துத் திட்டம் தீட்டினோம்.

தெல்லிப்பழைச் சந்தியை மையமாகக்கொண்டு, ஆசிரியர்களும் மாணவர்களும் நான்கு பகுதிகளாக நாற்றிசைக்கும் சென்று ஆங்குள்ள வீடுகள் தோறும் நுழைவுச் சீட்டுக்களை விற்றோம். விற்பனை செய்யும் ஒரு பகுதியினருக்கு நண்பர் வே. சிவசுப்பிரமணியம் அவர்களும், மற்றொரு பகுதியினருக்கு நண்பர் த. பூ. முருகையா அவர்களும், மற்றுமொரு பகுதியினருக்கு நண்பர் ஆ. இராமசாமி அவர்களும், பிறிதொரு பகுதியினருக்கு நானும் தலைவர்களாக அமைந்து செயற்பட்டோம். மக்களிடையே

எமக்குக் கிடைத்த வரவேற்புச் சொல்லுந் தரத்ததன்று. யாவரும் நுழைவுச் சீட்டுப் பெற்று எம்மை ஆதரித்தார்கள். ஒரு மாத கால எல்லைக்குள் இருபதினுயிரம் ரூபா (ரூ 20,000/=) சேகரிக்கப்பட்டது. இங்ஙனம், மக்களிடையே எமக்குக் கிடைத்த அளப்பரிய ஆதரவு எமது நோக்கம் சீரியது என்ற உணர்வினை ஏற்படுத்தியதால், அவ்வுணர்வு மேலும் வைரவிழாக் கட்டிட நிதியம் ஒன்றை அமைக்கத் தூண்டியது.

இக்குழுவிலே எமது பிரபலமான பழைய மாணவர் பலர் பணி ஆற்றினர். நான் இக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். திரு. ஆ. இராமசாமி அவர்கள் பொருளாளராகப் பணிபுரிந்தார். உடனடியாகவே நாம் நிதி திரட்ட முயன்றேம்; எமது பழைய மாணவர்களையும், அநுதாபிகளையும் நாடினேம். திரு. ஆ. இராமசாமி; திரு. த. பூ. முருகையா ஆகியவர்களும் நானும் மன்னர், மட்டக்களப்பு, கண்டி முதலாம் இடங்களுக்குப் பலமுறை சென்றேம்; நிதிசேகரித்தோம். 1969ஆம் ஆண்டிலே எமது கல்லூரிப் பழைய மாணவரும் வள்ளலும் 'டொலர்' அதிபருமாகிய திரு. ஆர். திருஞானசம்பந்தர் அவர்கள் வைரவிழா நினைவுக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டினர்கள். அவ்வேளையில் அவர்கள் தம் கையெழுத்திட்டதும் பணத்தொகை குறிக்கப்படாதது மாகிய ஒரு காசோலையை உதவி எமது நிதியைப் பெருக்கப் பெரிதும் உதவினர்கள்.

1970ஆம் ஆண்டு வைரவிழா ஆண்டாகும். அவ்வாண்டிலே பல மாற்றங்கள் நிகழ்ந்தன. மே மாதத்தில் பதவி உயர்வு கிடைத்த காரணத்தால் நான் மாற்றம் பெற்று வேறிடத்துக்குச் சென்றேன். எமது மதிப்புக்குரிய அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களும் அவ்வாண்டின் பிற்பகுதியில் பதவியிலிருந்து ஒய்வுபெற்றுர். வைரவிழா நினைவு கூடம் வரைபடத்திலேயே சிறிதுகாலம் இருக்கவேண்டிய வருந்தத்தக்கநிலை அதிபர் அவர்களின் இளைப்பாறிய நிலைமையினுல் ஏற்பட்டது.

**எழுந்த கதை:**

1971ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டிற்குள்ளே மகாஜனு மூன்று அதிபர்களைக் கண்டது. அவர்கள் ஒவ்வொருவரும் வைரவிழா நினைவு மண்டபத்தை நிறுவ வேண்டுமென்ற ஆவலுடையவராய் இருந்தனர். எனினும் தொடர்ந்து நீண்ட காலம் சேவை ஆற்ற முடியாதவர்களாய் அவர்கள் மாற்றம்பெற்றுச் சென்ற காரணத்தால் அவர்களால் கட்டிடத்தை உருவாக்க இயலவில்லை. இது வருத்தத்திற்குரியது.

எனினும், அதிபர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் இக்கட்டிடந் தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியன. இவர் முதலில் இருந்த வரைபடத்திலே சிறிது மாற்றத்தைச் செய்து, அதனைக் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறச் செய்தார். அதனேடு, பெற்றுர் ஆசிரியர் சங்கமே அக்கட்டிடத்தை நிறுவுவதற்கான அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுர். இந்நிலைகள் கட்டிடத்தின் ஆரம்பத்துக்கு அநுகூலமாயமைந்தன. இவற்றைக்கொண்டு நாம் அவரது தளராத ஊக்கத்தையும் உழைப்பையும் உணர்கின்றேம். அவரது முயற்சி இன்று இந்த மண்டபம் பூர்த்தியடைதற்கு மிக்க ஆதாரமாய் அமைந்தது.

1976ஆம் ஆண்டு மே மாதத்தில் நான் மீண்டும் மகாஜனு மதாவினுல் அணைக்கப் பெற்றேன். எமது மதிப்புக்குரிய முன்னைநாள் அதிபராம் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களின் ஆசியுடன் வைரவிழாக் கட்டிடநிதியம் மீண்டும் புனரமைப்புப் பெற்றது: நான் அதன் தலைவரானேன். நண்பர் திரு. சே. சந்திரசேகரி அவர்கள் செயலாளராகவும், திரு. பி. நடராசா அவர்கள் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். நாம் உடனடியாகவே கட்டிடத்தைக் கட்டி எழுப்ப முயன்றேம். எமது பழைய மாணவராகிய திரு. சே. கணேசரத்தினம் கட்டிடத்தை நிறுவித் தரும் பொறுப்பை ஏற்றுர்.

கட்டிடத்தைப் பூர்த்திசெய்வதற்கு, ஏறக்குறைய மூன்றரை இலட்ச ரூபா (3,50,000/) தேவைப்பட்டது. எம்மிடமோ ஒன்றரை இலட்ச ரூபா (ரூ. 1,50,000/-) இருந்தது. யாது செய்வது என்று நாம் தயங்கிச் சோர்ந்து விடவில்லை. எமது கல்லூரியில் விசுவாசமுள்ள பழைய மாணவரும் பெற்ருேரும் என்றும் எம்மைக் கைவிடமாட்டார்கள் என்ற அசையாத நம்பிக்கை எமக்கிருந்தது. கையில் உள்ள நிதியைக் கொண்டு கட்டிடத்தை எழுப்புவதெனத் துணிந்தோம்; செயற்பட்டோம். பல பழைய மாணவர்கள், பெற்ருேர்கள், ஏன்.....? மற்றை அநுதாபிகளுந் தாம் நிறைய நிறையத் தளராமல் உதவினுர்கள். நிதி பெருகியது.

உங்கள் யாவரதும் கவனத்திற்காக, பெருகிய நிதியை உதவியவர்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது; அங்கே பழைய மாணவரின் பட்டியலைப் பாருங்கள். நான் எனது அபிமானமுள்ள பழைய மாணவர்களை உரிமையுடன் நிதி கேட்டேன். அவர்கள் இன்முகத்துடன் தந்தார்கள்; இன்னுந் தருவார்கள்.

**நடந்த கதை :**

1971ஆம் ஆண்டு சித்திரைத் திங்களில் பழைய மாணவர் தினம் நடைபெற்றது. அன்று எமது மதிப்புக்குரியவரும் எமது கல்லூரியில் நீண்டகாலம் உப அதிபராகப் பணிபூண்டு கல்லூரியின் விருத்திக்கு அதிபருடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று உழைத்தவரும் பின்னர், யூனியன் கல்லூரி அதிபராகக் கடமை ஆற்றி ஓய்வு பெற்றவருமாகிய திரு. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள், ''நிறுவவிருக்கும் வைரவிழா நினைவு மண்டபத்திற்கு 'ஜயரத்தின நினைவுகூடம்' எனப் பெயரிட்டு அவர் ஆற்றிய சேவையைக் கௌரவிக்கவேண்டும்'' என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து முன்மொழிந்தார்கள். அத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1976ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் தீபாவலி தினத்தன்று எமது மதிப்புக்குரிய முன்னைநாள் அதிபர் திரு. தெ. து. ஜ. அவர்கள் கல்லூரிக்கு வந்தார். ஆலயத்திற் பூசை நடத்தினேம். அதனைத்தரிசித்தார். பின்னர், கட்டிடம் வளர்ந்து வருவதைக் கண்குளிரப் பார்த்தார். பார்த்துவிட்டுத் தம் மோட்டார் வண்டியை நோக்கி வந்துகொண்டிருக்கும்போது, "எனக்கு உடல்நலமில்லாமல் இருக்கிறது. அளவெட்டிக்கு வைத்தியரைக் காண்பதற்குச் செல்லவேண்டியிருக்கிறது'' என்று கூறிக்கொண்டு வண்டியில் ஏறிப் புறப்பட்டார். அந்தோ, அன்று தான் அவர் கடைசியாக எம்—தம்—கல்லூரியிற் காலடி வைத்தார். கொடிய கூற்றுவன் அவர் மீட்டும் எம் கல்லூரிக்கு வாராத வகையில் எம்மிடமிருந்து அவரைப் பிரித்துவிட்டான். இந்நிலை இவ்வளவு விரைவில் நேருமென, யான் கனவிலே தானும் நினைத்திலேன். விதியை விலக்க வல்லார் யார்?

**உருவச்சிலை;**

அதிபர் அவர்கள் அமரராகிய சில நாட்களின்பின் பெற்ருர், ஆசிரியர், பழைய மாணவர் சங்கங்களின் நிர்வாக சபை கூடி, வளர்ந்து வந்துகொண்டிருந்த புதிய கட்டிடத்துக்கு 'ஜயரத்தினம் நினைவுகூடம்' எனப் பெயரிடப்படல் வேண்டும் எனவும் அதிபரவர்களது வெண்கல உருவச்சிலை ஒன்று அம்மண்டபத்தின் முன்புறத்தே நிறுவப்படல் வேண்டுமெனவும் தீர்மானித்தது.

பாவலர் துரையப்பாபிள்ளை நூற்ருண்டு விழாவின்போது பாவலரின் முழுவுருவச் சிலையை வடித்துத் தந்தவரும் எமது கல்லூரிப் பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பகுதியின் பல்வேறிடங்களிலும் அமைந்துள்ள சிலைகளை உருவாக்கியவரும் ஆகிய

சிற்பக்கலாநிதி செ. சிவப்பிரகாசம் அவர்கள் அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களின் அரை உருவச்சிலையை வெண்கலத்தில் உயிரோவியமாக வடித்துத் தந்துள்ளார். இச் சிலைக்குப் பயன்பட்ட வெண்கலம் முழுவதையும் கல்லூரி மாணவர்களே திரட்டித் தந்து அமரருக்குத் தம் அஞ்சலியைச் செலுத்தியுள்ளார்கள்.

**நிலைத்த கதை :**

கட்டிடம் நிறுவுவதற்கு வேண்டிய நிதி மக்களிடம் சேகரிக்கப்பட்ட போதிலும் அது போதியதாக இல்லை. எனவே நாம் எமது தேசியப் பேரவை அங்கத்தவர் தந்தை செல்வா (திரு. சா. ஜே. வே. செல்வநாயகம்) அவர்களை நாடினோம். அவர் 1977ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அறுபதினாயிரம் ரூபா (ரூ. 60,000/-) பெற்றுத்தந்தார். இப்பணம் எமது தேவையைப் பூர்த்தியாக்கப் போதவில்லை. மேலும் பணம் தேவைப்பட்டது

1977ஆம் ஆண்டின் இறுதியிலே, அப்போது கல்விப் பணிப்பாளராகக் கடமை யாற்றிய, என்றும் என் அன்பிற்கும் நன்றிக்கும் பாத்திரரான திரு. க. சிவநாதன் அவர்களை அணுகினேன். அவர், என்னை வரவேற்றார். என் தேவையைக் கேட்டறிந்தார்; சிறிதும் தயக்கமின்றி உடனடியாக எவ்வளவு பணம் வேண்டியிருக்கிறது. என்று கேட்டார். நான் அச்சத்துடன், மெதுவாக ஓர் இலட்ச ரூபா (ரூ. 1,00,000/-) என்றேன். அவர், ''தருகிறேன்'' என்றார். நான் திகைத்துவிட்டேன். என்ன நான் கேட்ட தொகை அவ்வளவும் கிடைக்கப்போகிறதா? என்ற திகைப்பிலிருந்து மீளமுன் அவர், ''உங்கள் தேசியப் பேரவை உறுப்பினரது அனுமதியைப் பெறும்'' என்றார். உடனே அவருடைய அன்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு, எங்கள் பகுதித் தேசியப் பேரவை உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய மாட்சிமிகு அ. அமிர்தலிங்கம் அவர்களிடம் சென்றேன். என்னைச் சிறுவயது முதலே தெரிந்தவரும், என்னை ஒரு தமிழபிமானி ஆக்கியவரும், தமிழர்தானைத் தலைவருமாகிய அவர்மீது நான் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. என் வேண்டுகோளை உடனே ஏற்றுக்கொண்டு ஓர் இலட்ச ரூபா (ரூ. 1,00,000/-) பெற்றுத் தந்தார். அத்துடன் நிற்கவில்லை. இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் இப்புதிய கட்டிடத்திற்கு மின்வசதி செய்து தருவதற்கும் நிதி ஒதுக்கியுள்ளார். அவருக்கு நான் என்றும் நன்றியுடையேன் .

சென்ற வருடம் நவம்பர் மாதம் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்று இங்குவந்த திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள், எமது கல்லூரிக்குக் காலத்துக்குக் காலம் வருகை தந்து எம் கட்டிட நிர்மாணத்துக்குரிய ஆலோசனைகள் பல தந்தார்கள். பணம் வேண்டியபோதெல்லாம் அதனை விரைந்து பெறுவதற்கு அநுமதி தந்து பெரிதும் உதவியாக இருந்தார்கள். அவர்கள் காட்டிய பரிவும், காலத்தினாற் செய்த உதவியுமே எமது 'வைரவிழா நினைவு நிலை' விரைவிற் பூரணம். பெறுவதற்குக் காரணமாயின. அத்தகைய உதாரகுணம் வாய்ந்த எங்கள் கல்விப் பணிப்பாளருக்கும் நான் நன்றி பாராட்டுகின்றேன்.

> ''கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
> டென்னாற்றுங் கொல்லோ உலகு.''

என்பது வள்ளுவர் வாக்கு.

தருணமும் வேளையுந் தெரிந்து குறிப்புணர்ந்து நல்கும் பெரியோர்களுக்கு உலகு எதனைத்தான் கைம்மாறாகக் கொடுக்கமுடியும்? அத்தகையாளரும் இன்று உலகில் உள்ளார் என்ற இன்ப உணர்வு, இக்கட்டிடம் வளர்ச்சி பெற்றுப் பூரண நிலைக்குச் செல்லச் செல்ல என் உள்ளத்திலே மிக வலுவுடன் ஊறிப் பெருகி நிற்கின்றது. இந்த ஒப்புரவுடையோரது வாழ்வினாலேயே உலகம் உய்வடைந்து நிற்கின்றது என்ற தெளிவு எனக்கு உண்டாயிற்று.

# How it Strikes A Contemprary

**N. Sabaratnam**
Principal Emeritus,
Hindu College,
Jaffna.

The Saga of Mahajana could be summed up in one sentence. 'Give me a good Headmaster and I will give you a good school'.

The late T. T. Jayaratnam the maker of modern Mahajana was a good Head Master–Primus inter pares. T. T. was a true teacher. He taught all his life and let others teach.

The shy and sweet tempered lad I had met at Jaffna Hindu and later at Jaffna College had beneath his benignant smile the grim resolve to transform his father's log cabin into the White House that Mahajana is. And in Lincoln's phrase Mahajana became a school of the community, by the community, for the community. It was not merely a place that churned out high examination result and notable sports achievements, it became the cradle of nationalist thinking, emulating her elder sisters like Jaffna Hindu and Ananda.

How did he achieve this miracle? What was the Aladdin's lamp that lit up not merely Tellippalai, a village renowned for ancient learning, and wisdom but for regions far beyond? It was his *Lamp of Love*. It sounds strange but is true. How many who poured tributes from their hearts have referred to his winsome smile. But was it always winsome? Love not only creates but kills. Shrewd master in the art of managing men, he could laugh and laugh and be a villain if Mahajana were involved. All was grist that came to his mill.

That was how he was able to gather round him a band of devoted teachers, collect money for a vast building programme. Old boys were cajoled and harnessed to give generously to their alma mater, gradually buildings took shape and they stand as a perpetual memorial to this one person – the true architect of Mahajana as it stands today.

I was privileged to watch the way he set the fields, led the team, played the game and scored victories. But defeats didn't daunt him. For beneath his sartorial elegance—Taylor's son that he was—and his flair for Western manners, was the Sadhu that was fed on the Gita and the Saiva Siddhanta.

He took teaching so seriously that he was out to learn the correct trends in Education and the Profession. We argued and quarrelled over many things in the NPTA, the ACUT, the NPPA and finally in the CHMC. He played key roles in these bodies, and was sought after for his extra ordinary devotion to the tasks which he undertook and his unusual master for details. he was in sharp contrast to men like me who did steal the show sometimes by our slapdash ways.

There was much that was paroxical in the personality of my late friend. He taught himself without don

or demo and got his degree, and yet he enabled countless students to enter Varsity and become academicians. Fond of the grand manner in doing things at home or at school, his mind was austere. Gentle and modest as he appeared always, yet he had a mailed fist that bespoke the firm and unbending man he could be. The picture of Western dress and deportment that he often appeared to be in public yet he was the embodiment of Hindu Culture. These and other contradictions that puzzle the superficial minds are but different aspects of the synthesized person that Jayaratnam was.

The sadest encounter I had with him was at the farewell organized by the NPPA for the Principals that were fired out by the fiftyfive year rule in 1970. He spoke first, it was a speech tense with emotion, his voice cracked and his ubiquitous smile vanished. The audience were naturally embarrassed. They were counting on my capacity to dispell the gloom. But not all my wit and humour could lighten his stiff lips, The wrench was severe; he felt it in his bones, naturally so. While some of us had elaborated and embellished schools that had arrived, he reached his heights not by sudden flight, doubts lurked in his mind if they would be kept.

Someone said "if you want an achievement to last one year, write an article, if for ten years, plant a tree, if for a hundred years, educate a child." Looking round Mahajana we find that it had not merely planted trees but educated children who would otherwise have been creamed off the country side and lost to the community.

Let us, however not miss the wood for the trees, nor regard the architect as an idol to be merely honoured and worshipped. True the late Jayaratnam was no ordinary individual; he was not an institution either; he was indeed an influence. Let us cherish his memory in that light.

## GIVE LIBERALLY

*The college, which has thrived thus far on local munificence, is now constrained to cast about for benefactions from the rest of Ceylon. Education transcends geographical, racial linguistic, religious and even political bounds* **and therefore** *I earnestly hope that all our friends and well-wishers will give liberally and help achieve a great and enduring purpose.*

— **T. T. Jayaratnam**
*Mahajanan 1954*

# மகாஜனாவில்
# வரலாறு படைத்த மூவர்

கலைமாணி செ. சின்னத்துரை
முன்னாள் ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

ஆறுமுகநாவலர் பெருமான் கண்ட கனவை நினைவாக்குவதற்கும், அவர் நட்ட சைவப்பயிரைப் பேணிக்காத்து விருத்தி செய்வதற்கும் யாழ்ப்பாணத்தில் பற்பல கிராமங்களில் பல பெரியார் தோன்றினார்கள். சிறந்து விளங்குபவர்கள் சிலரில் மகாஜனக் கல்லூரி ஸ்தாபகராகிய திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் ஒருவராவார். அவர் ஒரு சிறந்த பாவலர். அவர் ஒரு சிந்தனையாளர். அவர் புகழ் பெற்ற கல்விமான். அவர் ஒரு சிறந்த ஆங்கிலக் கட்டுரையாளர். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஒரு பெரியார். தமிழர் பண்பாட்டிற்குரிய சரிகைத் தலைப்பாகையும், கூரிய ஒளியுள்ள கண்களும், விசாலமான முகமும் விபூதி துலங்கும் நெற்றியும், வெள்ளைச் சட்டையும் வேட்டியும் கொண்ட தோற்றம் தான் திரு. துரையப்பா பிள்ளையின் வடிவம். அவரை நான் முதல் முதல் 1926ஆம் ஆண்டு சந்தித்தேன். ஒருவரின் மனைவி மக்கள், வசிக்கும் வீடு, பழகும் நண்பர்கள், சந்திக்கும் மனிதர்கள் உலாவும் வாழும் இடங்கள், தொழில் புரியும் இடங்கள் எல்லாம் ஏற்கனவே வல்லானால் வகுக்கப்பட்டிருக்கின்றன வென்று வேத சைவ நூல்கள் பகர்கின்றன. அந்த உண்மைக்கு இணங்க எனக்கு மகாஜனக்கல்லூரியில் செறிந்து முறுகி வளர்ந்த தொடர்பு 39 ஆண்டுகள் உள்ளன. 1926ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 1965ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி வரைக்கும் ஆசிரியராகக் கடமை ஆற்றி உள்ளேன். அந்தத் தொடர்பு என் உள்ளத்தோடு பின்னிப் பிணைந்து முறுகி நிற்கிறது. எனது எஞ்சிய கால உலக வாழ்நாட்களிலும் அந்தத் தொடர்பு என் நெஞ்சை விட்டகலாது பச்சையாகத் துலங்கும் என்பதற்கு ஐயமில்லை. மூன்று அதிபர்களுடன் ஆசிரியனாகக் கடமை ஆற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

1926 தொடக்கம் 1929ஆம் ஆண்டு வரைக்கும் ஸ்தாபகருடனும் 1929ஆம் ஆண்டு தொடக்கம் 1945ஆம் ஆண்டு வரைக்கும் காலஞ்சென்ற திரு. கா. சின்னப்பா அவர்களுடனும் 1945 தொடக்கம் 1965 செப்டெம்பர் 21ஆம் திகதி வரைக்கும் அமரர் ஜயரத்தினம் அவர்களுடனும் கடமை ஆற்றினேன். ஸ்தாபகரின் ஆசீர்வாதத்துடன் ஆங்கில ஆசிரியர் தராதரப்பத்திரப்பரீட்சையை (English Teachers' Certificate Examination) ஒரே முறையில் சித்தியடைந்தேன். திரு. கா. சின்னப்பாவின் ஆசீர்வாதத்துடன் 'இன்றர் மீடியற்' (Intermediate) பரீட்சையிலும் அமரர் ஜயரத்தினம் அவர்களின் ஆசீர்வாதத்துடன் கலைமாணி (B. A.) பரீட்சையிலும் சித்தி அடைந்தேன். ஆகையால் மகாஜனா நான் கல்வியிலும் பண்பாட்டிலும் வளர உதவியது என்பது மிகையாகாது. என்னை ஆசிரியராக ஸ்தாபகர் நியமித்த போது கழுத்துவரைக்கும் மூடும் சட்டை (close coat) அணியக் கேட்டுக்கொண்டார். அப்படியே 1945ஆம் ஆண்டு வரைக்கும் அவ்வித சட்டை அணிந்து கல்லூரிக்குச் சென்றேன். அப்படியே எல்லா ஆசிரியர்களும் அவர் விரும்பியவண்ணம் உடை அணிந்து வந்தார்கள்.

மற்றெவ்விடத்திலும் காணமுடியாத ஒரு தூய சூழலை மகாஜனாவில் கண்டேன். கல்லூரியின் வளர்ச்சியில் ஏகோபித்த ஒருமைப்பாடு பொருந்திய நினைவுள்ள ஆசிரியர்களுடன் வேலைபார்க்கும் பேறு பெற்றேன். பெற்றோர்களும் ஆசிரியர்களும்

சரளமாகக் கலந்து பேசும் உறவை நான் அவதானித்தேன். விபரீதக் கொள்கைகள் தாண்டவமாடும் இக்காலத்தைப்போல் அல்லாமல், பெற்ருேர்களிற் பலர் தோளில் சால்வை எடுத்து ஸ்தாபகரைக் கனம் பண்ணுவதைக் கண்டேன். மாணவர்கள் பலர் புதுவருடப் பிறப்புக் காலங்களில் ஆசிரியர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் ஆசியைப் பெற்று ஏகுவார்கள்.

ஒரு குடும்பம்போலச் சண்டை சச்சரவு இன்றி ஒற்றுமையாகச் சகோதரர்களைப் போல ஆசிரியர்களாகிய நாம் கடமை ஆற்றினேம். ஸ்தாபகருக்குப்பின் நண்பனுகவும், உப அதிபராகவும், பின் அதிபராகவும் கடமை ஆற்றிய திரு. கா. சின்னப்பா அவர்கள் இந்தத் தூய சூழலைப் பேணிக் காத்தார். திரு. சி. தம்பு ஆசிரியர் இதில் சிறப்புற்ருர். ஸ்தாபகரின் மகன் அமரர் திரு. ஜயரத்தினம் அவர்கள் ஆசிரியருக்கிடையில் நிலவிய ஒற்றுமையை வலுப்படுத்தினுர். ஸ்தாபகர் அதிபராகக் கடமை ஆற்றும்போது மாணவர்களின் சங்கத்தில் ஆசிரியர் ஒவ்வொருவரும் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதி வாசிப்பதுண்டு. ஆடம்பர மற்றவாழ்க்கையும் உயர்ந்த இலட்சியமும், (Simple Living and High Thinking) என்னும் விஷயத்தில் நான் ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி வாசித்தேன். என்னிடத்தில் ஸ்தாபகர் அதிக அன்பும் மதிப்பும் காட்டினுர். அப்படியே மற்றைய இரு அதிபர்களும் என்னுடன் பழகினுர்கள். திரு. கா. சின்னப்பா அவர்களும் ஒரு சிறந்த எழுத்தாளர். பாட்டுகள் இயற்றுவதிலும் திறமையாளர். ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவார். இந்துசாதனம், ஆனந்தபோதினி (இந்தியாவில் வெளிவந்தது), சுதேசநாட்டியம் முதலிய பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்தன. என்னையும் பத்திரிகைகளுக்கு எழுதும்படி திரு. சின்னப்பா அவர்கள் தூண்டினுர். ''இலங்கையில் இந்தியக் கூலிகள்'', ''மன அடக்கம்'' என்னும் விஷயங்களில் நான் எழுதிய கட்டுரைகள் ஆனந்த போதினியில் வெளிவந்தன. ''பெரியபுராணப் பெரியோர்'' என்ற விஷயத்தில் சுதேசநாட்டியத்தில் நான் எழுதிய கட்டுரைகள் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் வெளிவந்தன. ஓய்வு நேரங்களில் திரு. சின்னப்பா அவர்களும் நானும் பெரியபுராணம், சிவஞானசித்தியார் முதலிய நூல்களைக் கலந்து உரையாடிப் படித்தோம்.

அமரர் ஜயரத்தினம் அவர்களும் என்னுடன் அதிக அன்புடையராய்ச் சமய விஷயங்களிற் கலந்து உரையாடுவார்.

எமது கிராமச் சூழலும் மகாஜனக் கல்லூரியின் தனித்துவம் பெற்ற சூழலும் என்னைச் சமய விஷயங்களில் ஈடுபாடும் சமய அறிவைப் பெறுவதில் ஊக்கமும் சமய வாழ்க்கையில் உறுதியான சித்தமுங் கொள்ள உபகரித்தன. முப்பது ஆண்டுகளுக்குமேல் கல்லூரியின் சமய விஷயங்களுக்கு நான் பொறுப்பாளியாக இருந்தேன். நவராத்திரி தினங்கள், சமயகுரவர்கள் குருபூசைகள், சைவ இளைஞர் சங்கம் மூலமாகக் கொண்டாடப்பட்டன. திருக்கேதீச்சரத்தில் ஒரு திருவிழாவும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஒரு திருவிழாவும் 1956ஆம் ஆண்டு தொடக்கம் கல்லூரி நடத்தத் தொடங்கியது. மேல்மாடிக் கட்டிடம் உருவாகியபோது 1960ஆம் ஆண்டு (கல்லூரியின் பொன் விழா – நடைபெற்ற காலம்) சிவகாமி சமேத ஆனந்த நடேசர் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. 5 வருடங்கள் அக்கோயில் தொண்டிலும் என்னை ஈடுபடவைத்தது நான் செய்த புண்ணியம் என்றே கருதுகிறேன்.

1945ஆம் ஆண்டு அமரர் திரு. ஜயரத்தினம் அவர்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றத் தொடங்கினுர். அவ்வாண்டிலே இலவசக்கல்வியும் வந்தது. கல்வி எழுச்சி மிகுந்த அக்காலத்தில் திரு. ஜயரத்தினம் அவர்களை அதிபராகக் கொண்டு கல்லூரி நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தது. தற்கால மகாஜனுவின் சிற்பி திரு. ஜயரத்தினம் அவர்களால் கல்வி உலகில் மகாஜனுவின் பெயர் துலங்க ஆரம்பித்தது. இலங்கையின் முதல்

தரக் கல்லூரிகளில் ஒன்ருக அது விளங்க ஆரம்பித்தது. கட்டிடங்கள் எழுந்தன. விஞ்ஞான ஆய்வு கூடங்கள் உருவாகின. விளையாட்டு மைதானம் செப்பமான வடிவம் எடுத்தது. கோயில் உருவாகியது. சிறந்த பரீட்சைப் பேறுகள் விளையாட்டுப் போட்டிகள், சமய விஷயப் போட்டிகள், நாடக அரங்கேற்றங்கள் மூலமாக மகாஜன ஒரு சிறந்த இடத்தைப் பெற்றது. மகாஜன என்பது மந்திரம்போல் நிலவி வந்தது—இந்த நிலையை வருவிப்பதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்து வெற்றி கண்டவர் அமரர் ஜயரத்தினம் அவர்கள். கல்லூரியின் உன்னத வளர்ச்சிக்கு ஓர் இரகசியமும் நுட்பமுமுண்டு.

1. மற்றக் கல்லூரிகள் பார்த்துப் பொருமைப்படக்கூடிய ஒரு சிறந்த ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒரு நோக்கு ஆசிரியர்களிடத்தில் வளர அமரர் ஜயரத்தினம் துணைக்காரணமாக விளங்கினர்.

2. ஆசிரியர்களின் சொந்தக் கல்வி வளர்ச்சியில் அவர் அக்கறை காட்டினர்; உற்ற இடத்தில் உதவும் ஒரு நண்பராகவும் விளங்கினர்.

3. ஒருவருக்கு உத்தியோகம் கொடுப்பதற்காக ஆசிரியர்களை அவர் நியமிக்கவில்லை. மாணவர்களின் நலன்கருதியே அவர் ஆசிரிய நியமனம் செய்வார். மலையாளத்திலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் சிறந்த விஞ்ஞான ஆசிரியர்களை வரவழைத்து நியமனம் செய்தார்.

4. வகுப்பு அறைக்குள் கல்வி பயிற்றும் பணியில் புதிய திருப்பத்தை உண்டாக்கினர். (We must improve the quality of education within the Class room.) என்று பல முறைகளில் கூறியுள்ளார்.

5. உதைபந்தாட்டப் போட்டிகளில் கல்லூரி சிறந்து யாழ்ப்பாணத்தில் உன்னதநிலை அடைய ஆவன செய்தார்.

மேலே கூறப்பட்ட முறைகளினுல் கல்லூரிக்கு நல்ல மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சேரத் தொடங்கினர். கல்வியின் தரம் உயர்ந்தது.

எங்கே போனுலும் இப்போது மகாஜனவின் வெற்றிக்கொடி பறக்கிறதைக் காணலாம். இலங்கையில் எந்தக் காரியாலயத்திலும் மகாஜனப் பழைய மாணவர்கள் கடமை ஆற்றுவதைக் காணலாம். பொறியியல் ஆளராகவும் வைத்திய கலாநிதிகளாகவும் சட்டத்தரணிகளாகவும் பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் பற்பல உயர்ந்த ஸ்தானங்களில் அமர்ந்து கடமை ஆற்றுபவர்களாகவும் கல்லூரியின் பழைய மாணவர் உளர். இலங்கையில் மாத்திரமல்ல இங்கிலாந்து, அமெரிக்கா, கான, சாம்பியா, நைஜீறியா, இந்தியா, சவூதி அரேபியா, கனடா முதலிய இடங்களில் பழைய மாணவர்கள் பலர் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளனர். அவர்கள் அங்கிருந்து கல்லூரியினது அயல் கிராமங்களின் பணவிருத்திக்கு உதவுகின்றனர். அவர்கள் அனுப்பும் பணம் கிராமங்களில் உலாவித் திரிகிறது; எமது கல்லூரி பணவிருத்தியைப் பெருக்குவதில் கிராமங்களுக்குப் பெரும் தொண்டு செய்கிறது என அமரர் திரு. ஜயரத்தினம் அவர்கள் எமக்குச் சொல்வதுண்டு.

அமரர் ஜயரத்தினம் அவர்களின் ஞாபகச் சின்னமாகத் தற்கால மகாஜன விளங்கும்—அவரின் சிலை என்றென்றைக்கும் அவரின் புகழைப் பேசாமல் பேசிக்கொண்டிருக்கும். கல்லூரியில் சேவை செய்ய வாய்ப்புப் பெற்ற ஆசிரியர்கள் மூன்று அதிபர்களினதும் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். ஒற்றுமை, கடமையுணர்ச்சி உள்ளவர்களாயும், கல்வி பயிலும் ஒரே நோக்கமுடையவர்களாகவும், சைவ சீலர்களாகவும், மாணவர்களுக்கு முன்மாதிரியான நெறியில் வாழ்பவர்களாகவும் இருப்பார்களாக. மகாஜன சர்வகலாசாலையின் அந்தஸ்தைப் பெற்று முன்னேறத் தனக்குவமை இல்லாத பரம்பொருள் அருள் புரிவாராக.

# The Victorious Gem

**T. Sellappah**
*Deputy Principal*
*Canagaratnam MMV, Jaffna.*

It is my humble duty to thank the present Principal and members of the Mahajana College Diamond Jubilee Commemoration Jayaratnam Block Committee for having given me an opportunity to express my deep sentiments about the late Mr. T. T. Jayaratnam to whom I am deeply indebted in a number of ways.

I was first introduced to him by his cousin Mr. S. Ratnasabapathy who was then on the tutorial staff of J/Uduvil Mann's English School. Our first contact was in December 1945. I was asked to act for Mr. K. Krishnapillai B. A. (Lond.) who had been selected to follow the Post Graduate Training Course at the Government Training College, Maharagama, in 1946. At the very first meeting he assured me of a permanent post.

His betwitching smile and radiant wit enhanced by his dynamic personality literally struck me with wonder.

I assumed duties as an assistant teacher in January 1946. Mahajana was then set up in rather humble surroundings devoid of grand buildings but the general set up was ennobling. There was a serene atmosphere and everybody associated with the institution dedicated himself or herself fully to the noble task of education. I also found that the late Mr. C. Thambu popularly and fondly called "Thambu Master" played the dominant role. The late Mr. T. T. Jayaratnam had the best of regards or this teacher. There were a few others too who were held in high esteem since they were directly associated with the late Mr. T. A. Thuraiappapillai.

During my stay at Mahajana I used to travel daily from Jaffna. From Tellippalai junction we had to walk up to Mahajana College since there was no bus service at that time. The late Mr. Jayaratnam too would join us and on the way he used to indulge in light talk which not only entertained us but also made us think about matters of common interest in the correct perspective.

As a man he was excellent. He understood all our problems and the guidance he gave us was very appreciable. His stature and personality were of the correct mould and he could inspire others to prompt action by his own persuasive ways. His outbursts of righteous anger in his young days never inflicted any lasting pain on anyone but helped many to tread on the "angel path". He lost his temper many a time but he never sinned.

The fullest co-operation that his assistants gave him was undoubtedly due to his amiable ways.

He had to tide over many hazards during the period 1946—1950. That was really the "seed time" of Mahajana. His untiring efforts and whole-hearted devotion raised the status of the institution. In 1947 the college was raised to the status of a Grade II institution

and the remarkable progress made during the span of two years soon earned Grade I status in 1949. Since then the progress of the institution has been steady and sound. I could still remember how gratefully the staff was thanked by him for its co-operation in raising the status of the college. He recognised the merits of his staff and sorted out the duties accordingly. He never left any room for anybody to grumble about anything. His administrative capacity and academic attainments were highly extolled by all the education authorities who visited the institution in its early stages of development. His persuation and incessant remindings made more than five of us graduate creditably during the period 1947—1949. He was not only the architect of the institution but also a "maker of men".

He was a true Hindu with complete respect for our traditions. At the "Navarathiri Poojahs" conducted in the College he identified himself quite fully and displayed his deep religious fervour. He nurtured the children according to the traditions of our faith. The religious discipline that he introduced to the pupils helped them to mould their character well.

As a teacher of English and British Constitution he earned a special name. His techniques of teaching were unique. His eloquence, articulation and pronounciation of English were inimitable. He was like a masterteacher to those of us who had just stepped into the field. He was a first rate teacher with a complete mastery of the metods of instruction.

As an educationist he had acquired island wide recognition even before he had reached his fortieth year. The glowing tributes paid to him by some of the leading men of the time testify this.

When Dr. N. M. Perera paid a visit to Mahajana he referred to the profound erudition and the administrative ability of the late Mr. T. T. Jayaratnam in very glowing terms.

He was like a guiding star to the Northern Province Principals' Association. The Association was immensely benefited by his presence. Realising his potentialities and latent talents he was saddled with responsible positions in it. The greatest educationists like late Mr. Handy Perinpanayagam, late Mr. A. E. Thambar and others spotlighted the talents in late Mr. T. T. Jayaratnam. He was one of most respected members of that August assembly.

Men of the calibre of the late Mr. T. T. Jayaratnam come into this world to fulfil a mission and when that is achieved God recalls them. He came to complete what his great father had started. He achieved it fully. He proved beyond doubt that he was the great son of a great father.

May God bless those who have dedicated themselves to the noble task of perpetuating the name of this noble soul who selflessly surrendered himself to the noble mission of building up an institution not only for his own village but for the whole of Sri Lanka by erecting a memorial block and statue

# அதிபர் ஜயரத்தினம் அவர்களின் தலைமைத்துவப் பண்புகள்

தி. வேலாயுதம்,
சிரேட்ட விரிவுரையாளர்,
கொழும்பு வளாகம்,
இலங்கைப் பல்கலைக்கழகம்.

அன்பு நிறைந்த ஆசானாகவும், ஆற்றல் வாய்ந்த அதிபராகவும் விளங்கிய அமரர் ஜயரத்தினம் அவர்களைப் பற்றி எழுதக் கிடைத்தது என் பெரும் பாக்கியம் என்றுதான் கருதுகிறேன். கல்வி அதிகாரிகளும், அதிபர்களும், ஆசிரியர்களும் கல்வியுலகில் மலிந்து காணப்பட்ட போதிலும் அவர்களிடையே தலைமைத்துவப் பண்பினைக் கொண்டிருப்பது நலிந்துதான் காணப்படுகிறதெனலாம். ஆனால் திரு. ஜயரத்தினம் அவர்களிலோ, ஆசிரியர், அதிபர் தனிமனிதர் என்ற தோரணையிலெல்லாம் அவரின் தலைமைத்துவப் பண்பு மேலோங்கி நின்றதை எனது பள்ளிக்கூட வாழ்க்கை நினைவூட்டுகிறது.

ஆசிரியர்களில் பலர் அதிபராகவோ, தலைமை ஆசிரியராகவோ, கல்வி அதிகாரிகளாகவோ பதவியுயர்வு பெற்றபின், வகுப்பறைக் கற்பித்தலைக் கைவிட்டு அல்லது அதனில் தமது கவனத்தைக் குறைத்து, நிருவாகக் கடமைகளில் தமது கவனத்தைச் செலுத்துகிறார்கள். ஆனால் அதிபர் அவர்களோ நிருவாகக் கடமைகளுக்கு அளித்த அதே முதன்மையை வகுப்பறைக் கற்பித்தலுக்கும் அளித்தது எனது கவனத்தை ஈர்த்தது. நேரசூசியில் மட்டும் கற்பித்தற்கு உரிய நேரத்தை ஒதுக்கிவிட்டு வகுப்பறைக்குச் சென்று கற்பிக்காது விடும் முறையினை அனுசாமல் நேரசூசியில் குறிப்பிட்ட நேரத்திற்கு வகுப்பறைக்குச் சென்று கற்பிப்பார். அத்துடன் தமது பாடத்தைக் கவனமாகத் திட்டமிட்டு முறையாக ஒழுங்குபடுத்தி வகுப்பறைகளில் சென்று கற்பித்தமை அவரின் உதவி ஆசிரியர்களுக்கு ஊக்கத்தை அளித்ததுடன் முன்மாதிரியாகவும் அமைந்தது. வகுப்பறை ஒழுங்கு முறையினை நிலைநாட்டுவதிலும் சுமுகமான சூழ்நிலையினை ஏற்படுத்துவதிலும் அவரின் தலைமைத்துவப் பண்பினை நினைந்து இன்றும் வியப்படைவதுண்டு.

கல்லூரி நிருவாகத்தில் மட்டுமல்லாமல், கல்லூரிக்கு வெளியிலும் அன்னாரின் தலைமைத்துவப் பண்புகள் மிளிர்ந்ததைக் காணமுடிந்தது. இப் பண்புகள் அவரின் சகாக்களினதும், மாணவர்களினதும், சமூகத்தினரதும் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுத்தன. ஒவ்வொருவரின் உள்ளார்ந்த ஆற்றல், ஆளுமைப் பண்புகள், திறமைகள், உளத் தேவைகள், நாட்டங்கள் ஆகியவற்றை எடையிட்டு, பொருத்தமான பணிகளை ஒதுக்குவதில் சாமர்த்தியம் படைத்தவர். அத்துடன் பள்ளிக்கூடச் செயன்முறைகளில் பல்வேறு விதத்தில் தமது பணிகளை ஆற்றியவர்களுக்குத் தகுந்த மதிப்பும், கணிப்பும் கொடுக்கத் தவறவில்லை. மேலும் எப்பொழுதும் தலைமைத்துவப் பணியினைத் தாமே தமக்கென வைத்துக்கொள்ளாமல் மற்றவர்களுடன் பகிர்ந்தும், பொருத்தமுள்ள சந்தர்ப்பங்களில் தகுந்தவர்களுக்கும் தலைமை தாங்கிச் செயலாற்றும் பொறுப்பைக் கையளித்தும் தமது நிருவாகத்தைப் பயனுள்ள முறையில் நடாத்தி வந்தார்.

தமது தலைமைத்துவப் பண்பினைப் பள்ளிக்கூடத்திற்குள் மட்டும் பயன்படுத்தாமல் பள்ளிக்கு வெளியிலும் வெளிப்படுத்தினார். சமயகாரியங்களிலும் சமூக சேவைகளிலும் கிராம அபிவிருத்தியிலும், கூட்டுறவு நடவடிக்கைகளிலும் பங்குகொண்டு வழி நடாத்தி வந்தார். இவருடைய சமூகச் சேவைத் தொண்டு கல்வி விருத்தியுடன் இணைந்து தெல்லிப்பழைக்கும் அதனை அடுத்த கிராமங்களுக்கும் அளப்பரும் நன்மை பயந்ததென்றால் மிகையாகாது.

குறிப்பாக, பள்ளிக்கூட நிருவாகமும் பொதுவாகக் கல்வி நிருவாகமும், சமூகத்துடன் நெருங்கிய ஆக்கபூர்வமான தொடர்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது. இக்கருத்தினை ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்பே அமரர் ஐயரத்தினம் மிகச் சிறந்த முறையில் அமுல் நடாத்தி வந்தார். பெற்றார் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கங்கள் போன்றவற்றை நிறுவியும் இல்ல விளையாட்டுப் போட்டிகள், பரிசு அளிப்பு விழாக்கள், நிறுவியவர் நினைவு விழா, நாடக அரங்குகள் போன்றவற்றினைச் சீரிய முறையில் நடாத்தியும் சமுதாயத்துடன் நெருங்கிய ஒன்றிணைப்பினை ஏற்படுத்தியதுடன் அவர்களுக்கு அரும்பெரும் சேவையாற்றினர்.

கல்விப் பரிபாலனத்தில், கல்வி வசதிகள் அளிப்பதற்கான நிதியைப் பெறுவது பெரும் பிரச்சினையாக விளங்குகிறது. இதன் காரணமாகக் கல்வி விருத்தியில் பாதிப்பு ஏற்படுவது மட்டுமல்லாமல், கல்வி வசதியளிப்பதில் விரும்பத்தகாத ஏற்றத்தாழ்வும் தோன்றுகிறதெனலாம், கிராமப்புறச் சூழலிலமைந்து, பெரும்பாலும் விவசாயப் பெருமக்களின் சிறுருக்குக் கல்விச் சேவையை அளித்த இக் கல்லூரியைக் கட்டி எழுப்பி நகர்ப்புறப் பாடசாலைகளின் தரத்தை அடைந்தது மட்டுமல்லாமல் அவற்றிலும் பார்க்கக் கூடிய வசதிகளையும் கொண்டு பாரிய சேவையையும் அளிக்கும் அளவிற்குத் தேவையான நிதிவளத்தினைப் பெற்றுக் கொடுத்தது உண்மையில் போற்றுதற்குரியது. நிறுவன மட்டத்தில் திட்டமிடுவதிலும் நிதிவளங்களைப் பரிபாலித்தலிலும் மிக முதன்மையான முறைகளை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். இவர் கடல் கடந்து மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கூட நிதி திரட்டுவதில் வெளிப்படுத்திய ஆர்வத்தையும் ஆற்றலையும் அங்கு நான் சந்திக்க நேர்ந்த சில பெரியார்கள் வியந்து பாராட்டினர்கள். நேர்மை, நாணயம், மன உறுதி, கடமை உணர்வு போன்ற சீரிய பண்புகள் அவரில் காணப்பட்டமை இதற்கு முக்கிய காரணமெனலாம்.

கல்வி விருத்தி முழுமையாகவும், சமசீர் படைத்ததாகவும் விளங்கவேண்டும் என்று அவர் கண்டார். அதற்காக உளவிருத்திக்கு மட்டும் மகத்துவம் அளிக்காமல். விளையாட்டுத்துறை, கலைகள், கைப்பணிகள், அறநெறி வாழ்க்கை போன்றவற்றிலும் அக்கறை கொண்டார். இத்துடன் நவீன உலகில் விஞ்ஞானக் கல்வியின் முக்கியத்துவத்தை முன்பு உணர்ந்து, ஆய்வுகூட வசதிகளை விரிவுபடுத்தி விஞ்ஞான, தொழில்நுட்ப, மருத்துவ, விவசாயத் துறைகளில் அதி சிறப்பான கல்வி வசதிகளை ஏற்படுத்தினர். உற்று நோக்கும்போது அவரின் ஒவ்வொரு முயற்சியும் மாணவரின் சிறந்த கல்விக்கு வழிவகுப்பதாக அமைந்ததுடன் சமூகத்தில் எதிர்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டதாகவும் காணப்பட்டது.

ஒரு பள்ளிக்கூடத்தின் சேவையும், வளர்ச்சியும் அதன் அதிபரில் மட்டுமல்லாமல் அதன் ஆசிரிய குழுவிலும் தங்கியுள்ளதென்ற உண்மையையும் உணர்ந்திருந்தார். ஆசிரியருடன் மிக அன்புடன் நெருங்கிப் பழகும் பாங்கினைக் கொண்டிருந்ததுடன், ஒவ்வோர் ஆசிரியரினதும் உள்ளார்ந்த ஆற்றல்கள், தகைமைகள் யாவற்றையும் அறிந்து அவர்களுக்குப் பொருத்தமான பணிகளைப் பகிர்ந்தளித்துப் பள்ளிக்கூடத்தைப் பரிபாலித்தார். அத்துடன் ஆசிரியர்களிடையேசிநேக மனப்பான்மையையும் கூட்டுறவையும் பேணி வளர்த்தார். பள்ளிக்கூடத் தேவைகளைக் கருத்திற் கொண்டு பொருத்தமான ஆசிரியர்களை அமர்த்தினர். இதனல் மகாஜன ஆசிரியர்கள் ஒரு குடும்பம் போலவும் ஒரு குழுப் போலவும் கடமையாற்றினர்கள். பூசல்கள் பிணக்குகள் தோன்றுகின்ற அறிகுறிகள் தென்பட்டதும் அவற்றினைக் களைந்துவிட நடவடிக்கை எடுப்பார். இவர் இன்சொல்லையும், புன்முறுவலையும் இதற்காகப் பயன்படுத்துவார். சேவைக்காலப் பயிற்சியின் பெரும்பகுதியினைப் பள்ளிக்கூடங்களிலேயே அளிப்பது விரும்பத்தக்கது. அப்போது பள்ளிக்கூடத்தின் இயற்கையான அன்றுடச் சூழல் நிலைமைகளைத் தழுவி இப்பயிற்சியை அளிக்கலாம். இதனை அவர் தம்மால் இயன்ற

அளவு மறைமுகமாகச் செய்துவந்தார் எனலாம். இவரின் பட்டதாரி உதவி ஆசிரியர்கள் சிலர் ஆசிரிய தகுதித் தேர்வு நெறியில் சேர்ந்து படிக்கப் பல்கலைக் கழகத்தில் கல்விப் பீடத்தில் சேர்ந்தபோது, அவர்களின் ஆற்றலையும், தொழிற்றுறை வளர்ச்சியையும் கண்கூடாகக் காணமுடிந்தது. இதற்குத் திரு. ஜயரத்தினம் அவர்கள் பெருமளவு உதவினுர் என்முல் மிகையாகாது.

அரசினுல் 1961ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்ட உதவி நன்கொடை பெற்ற பள்ளிக்கூடங்கள் காலக்கிரமத்தில் தரம் குறைந்து விட்டன என்ற கருத்துப் பரவலாக நிலவுகிறது. ஆனல் மகாஜனக் கல்லூரியினைப் பொறுத்தமட்டில் திரு. ஜயரத்தினத்தின் தலைமையில் மகாஜனவின் வளர்ச்சி மேன்மேலும் இடம் பெற்றதுடன் விரும்பத்தக்க பாரம்பரியங்கள் பேணப்பட்டமையும் போற்றுதற்குரியது.

இவரின் கல்விச்சேவை நிர்வாகத் திறமை போன்றவற்றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது சில உண்மைகள் காணக் கிடைக்கின்றன. ஒருவர் மனிதனின் உள்ளார்ந்த ஆற்றலினை வளர்ப்பதன் மூலம் சமூகத்தையே உயர் நிலைக்குக் கொண்டு வரலாம் என்றும், இதனைச் சாதிப்பதற்குக் கல்வி ஒரு அருமையான கருவியென்றதிலும், கல்வி ஒரு மனிதனின் அடிப்படை உரிமை யென்றதிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். இந் நம்பிக்கைகளின் அடிப்படையில் செயலர்ற்றும் போது அவர் சமகால சமூக நிலைமைகளைக் கருத்திற் கொண்டதுடன் எப்போதுமே தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்துச் செயலாற்றினுர். இப் பெரியாரின் கல்விச் சேவை எமது ஆசிரிய சமூகத்திற்கும் கல்விப் பரிபாலகர்களுக்கும் நல்ல வழிகாட்டியாக அமையலாம்.

# ஆதி இலங்கையில் இந்துமதம்

பேராசிரியர் கா. இந்திரபாலா,
வரலாற்றுத்துறைத் தலைவர்,
இலங்கைப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண வளாகம்

தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியிலே வழங்கிவந்த பல வழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இன்று இந்துமதம் என்னும் பொதுப்பெயரைப் பெற்றுள்ளன. எனவே, இந்துமதத்தின் வரலாறு பிற மதங்களின் வரலாறு போன்று குறிப்பிட்ட ஒரு காலத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு வழியிலே சென்ற வரலாறாகாது. இலங்கையைப் பொறுத்தமட்டில், இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து மக்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கிய காலத்திலிருந்து இந்து மதக் கருத்துக்களும் கிரியைகளும் நிலவி வந்துள்ளன எனலாம்.

ஆதி இலங்கையில் இருந்த இந்துக்கள் பற்றியும் இந்துக் கோயில்கள் பற்றியும் போதிய தகவல்கள் எங்களுடைய இலக்கிய ஆதாரங்களிலே பேணப்படவில்லை. தொல்பொருளியல் ஆராய்ச்சி நாடு முழுவதும் பரவலாகச் செய்யப்படாத காரணத்தினால் தற்போது எமக்குத் தொல்பொருளியற் சான்றுகளும் போதிய அளவில் இல்லை. ஆகவே, கிடைத்துள்ள ஒரு சில சான்றுகளை வைத்துக்கொண்டு முழுமையற்ற முறையில் இக் கட்டுரையை எழுத வேண்டியுள்ளது. பதினறு ஆண்டுகளுக்குமுன் இவ் விஷயத்தைப் பற்றி யான் எழுதும்போது இருந்த நிலையிலிருந்து, தற்பொழுது சான்றுகளைப் பொறுத்து அதிக முன்னேற்றம் இருக்கின்றது என்று சொல்வதற்கில்லை.[1]

இலங்கை வரலாற்றுக்குக் கிடைத்துள்ள பழைய இலக்கிய மூலாதாரங்கள் பௌத்த பாளி நூல்களாகும். இவற்றில் தற்செயலாக இடம்பெறும் குறிப்புக்களை விட இந்துக்கோயில்களைப் பற்றியோ இந்துக்களைப் பற்றியோ தகவல்கள் இல்லை. இந்து மதத்தைப் பற்றிக் கூறும் தமிழ் நூல்கள் மிகவும் பிற்பட்ட காலத்தவையாய் இருப்பது ஆராய்ச்சியாளருக்குப் பல கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனை நாம் மனதில் வைத்தே இலங்கையில் இந்துமதம் பற்றிய இவ் வரலாற்றை விளங்கிக்கொள்ள வேண்டும்.

கி.மு. மூன்றும் நூற்றுண்டில் இலங்கையின் தெளிவான வரலாறு தொடங்குகின்றது எனலாம். இதற்கு முன்பே இந்தியாவிலிருந்து பல இனங்கள் இங்கு வந்து குடியேறியிருந்தமையால், அவர்களுடன் கூடவே இந்துமதமும் பரவியது என்பதில் ஐயமில்லை. கி. மு. மூன்றும் நூற்றுண்டில் முதன்முறையாகச் சாசனங்கள் பொறிக்கப்பட்டபோது, பிராமணர்களும், 'சிவ' என்ற பெயரைத் தாங்கிய பலரும் இலங்கையில் இருந்தமை பற்றி இச் சாசனங்களால் அறியலாம்.[2] இதே சான்றுகளை இலங்கையின் மிக முக்கியமான பாளி நூலாகிய மகாவங்சத்திலும் பெறலாம். இவற்றை ஆராயும்போது, பௌத்தம் பரவுவதற்கு முன் இலங்கையில் இருந்த சிறிய அரசுகளை ஆண்ட மன்னர்கள் பிராமணீயச் செல்வாக்கிற்கு உட்பட்டோராய்ப் பிராமணர்களைத் தம் ஆசிரியர்களாகவும் வைத்தியர்களாகவும் நியமித்திருந்தனர் என்றும், பொதுவாகச் சைவமதத் தொடர்புடையோராகக் காணப்பட்டனர் என்றும் ஊகித்துக்கொள்ள இடமுண்டு. உதாரணமாக, தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்கு ஒரு பிராமணன் கோபூதி என்பான் ஆசிரியனாகவும் வைத்தியனாகவும் கடமையாற்றினான் என இரு பிராமிக் கல்வெட்டுக்களால் அறியலாம்:

(1) மஹரஜஸ தெவனபியஸ கமிணி திஸஸ வெஜ பமண கொபுதிய லெணெ ஸகஸ ஸிவபுதிய ஸகய லெண ஸகஸ.[3]

(தேவாநம்பிய காமிணி திஸ்ஸ மகாராசாவின் வைத்தியன் பிராமணன் கோபூதியின் குகை சங்கத்துக்கு (க்கொடுக்கப்பட்டது.) சிவபூதியும் சேர்ந்து கொடுத்த குகை சங்கத்துக்கு).

(2) மஹரஜஸ தெவனபியஹ அசிரிய பமண கொபுதிய லெணெ.[4]
(தேவாநம்பிய மகாராசாவின் ஆசிரியன் பிராமணன் கோபூதியின் குகை.)

இவற்றை ஒத்த வகையிலேதான், மகாவங்சத்திலும், தேவாநம்பிய திஸ்ஸ மன்னனுக்கு முன் ஆண்ட பண்டு வாசுதேவ மன்னன், பண்டுகாபய மன்னன் ஆகியோர் பிராமணர்களைத் தங்கள் சோதிடர்களாகவும் ஆசிரியர்களாகவும் புரோகிதர்களாகவும் கொண்டிருந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.[5]

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிற் பல சிற்றரசுகளிலே ஆட்சிபுரிந்த அரசர்கள், இளவரசர்கள் ஆகியோருள் 'சிவ' என்ற பெயரைப்பெற்ற பலர் சாசனங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளனர். உதாரணமாக:

(1) ரஜ ஸிவ புத அய ஸிவஹ புத அய ஸிவஹ மஹஸுதஸநெ லெணெ[6]

(சிவ மன்னன் மகன் சிவ இளவரசனுடைய மகன் சிவ இளவரசனுடைய மகா ஸுதர்சனக் குகை).

(2) தெவனபியஸபதிகரஜ துஸதரஸ புத அய ஸிவஸ புத அய துஸதர புதஸ கமணி ஸிவென கரித மஹஸுதஸனெ லெணெ.[7]

(தேவாநம்பிய திஸ்ஸனுடைய சகோதரன் துஸதர மன்னனுடைய மகன் சிவ இளவரசன் மகன் துஸதர இளவரசனுடைய மகன் காமிணி சிவனால் அமைக்கப்பட்ட மஹாஸுதர்ஸனக் குகை.)

இரண்டாவது கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள காமிணி சிவனுடைய நகரின் பெயர் சிவநகரம் என இன்னொரு கல்வெட்டுக் கூறுகின்றது[8]. சாசனச் சான்றினைப் போன்றே மகாவங்ஸத்தின் சான்றும் அமைகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலே சில மன்னர்களும் இளவரசர்களும் 'சிவ' என்ற பெயரைப் பெற்றிருந்தனர் என மகாவங்ஸத்தால் அறியலாம். கிரிகண்ட சிவ இளவரசன், முடசிவ மன்னன், மகாசிவ மன்னன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்[9]. இவற்றை எல்லாம் தொகுத்து நோக்குமிடத்து, இலங்கையிலே பௌத்தம் பரவுதற்கு முன்னர் அரச குடும்பத்தினருள்ளும் பொது மக்கள் மத்தியிலும் சைவ மதத்தைத் தழுவியோர் இருந்தனர் என்று கூறலாம்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட மூன்றும் நூற்றாண்டுக்கு முன் இலங்கையில் இந்துத் தெய்வங்களின் வழிபாட்டுக்காகக் கோயில்களும் இருந்திருக்க வேண்டும். ஆதிகாலத்தில் வர்த்தகர்கள் வந்து சென்ற பழந் துறைகளாகிய மாதோட்டம், திருகோணமலை ஆகியவற்றிலிருந்த திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய கோயில்களின் தொடக்கம் கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்கு முன்னராக இருக்க முடியும். எனினும், அக்காலத்து இந்துக் கோயில்கள் பற்றிய சான்றுகள் எமக்கு நம்பகமான வகையிலே கிடைக்கவில்லை. ஒரு விதிவிலக்காக, அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட சிவலிங்க வழிபாட்டுத்தலம் பற்றிய குறிப்பொன்று மகாவங்ஸத்திலே இடம் பெற்றுள்ளது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை அமைத்தவனாகக் கருதப்படும் பண்டுகாபய மன்னன் 'சிவிகாசாலா' ஒன்றையும் அங்கு கட்டுவித்தான் என மகாவங்ஸ குறிப்பிடுகின்றது.[10] 'சிவிகாசாலா' என்பது சிவலிங்கக்

கோயில் எனவும் பொருள்படும் என்று மகாவங்ஸத்தின் உரைநூல் கூறுவதால், பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தில் சைவத்தலம் ஒன்றை அமைத்திருந்தான் எனப் பலரும் கொள்வர்.[11] பின்னர், தேவாநம்பிய திஸ்ஸ மன்னன் ஆட்சி நடத்தியபோது அநுராதபுரத்திலே திய வாஸ என்ற பிராமணனுடைய தேவகிருகம் (தேவாலயம்) ஒன்று இருந்ததாக மகா போதி வங்ஸ என்ற இன்னொரு பழைய ப்ாளி நூலால் அறிகின்றோம்[12]. நாட்டின் பிற பாகங்களிலும் இப்படியான இந்துக் கோயில்கள் அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

கோயில்களைப் போன்று, இந்துக்களுடைய யாகசாலைகளும் இருந்தன என அறிய முடிகின்றது. அநுராதபுரத்தில் பண்டுகாபய மன்னன் ஒரு பெரு வேள்விச் சாலையை அமைத்தான் என மகாவங்ஸ கூறும்[13] வெஸ்ஸகிரியிலுள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்றிலே ஒருவன் 'யகதத' (யாக தத்த = வேள்வி செய்வோன்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.[14]

பௌத்தம் இலங்கையிலே கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் உத்தியோக பூர்வமாகப் பரப்பப்பட்டதுடன் பிற சமயங்கள் மறைந்துவிட்டன என்ற ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் வகையில் பழைய பாளி நூல்களின் வரலாறு அமைந்துள்ளது. ஆனால் அப்படியன்றி, ஆதியில் இருந்த பௌத்தமல்லாத சமயங்கள், சிறப்பாகச் சைவமும் சமணமும் தொடர்ந்து பல இடங்களிலே செல்வாக்குடன் விளங்கின என்பதைப் பிறஆதாரங்களால் அறியலாம். பௌத்தம் பரவத்தொடங்கி மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கூடச் சில சிற்றரசர்கள் பௌத்தத்துக்கு மாறாது இருந்திருக்கிறார்கள். திஸ்ஸமஹாராமையிலுள்ள ஒரு கல்வெட்டு அங்கு கி. பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி நடத்திய சிற்றரசன் பௌத்தத்துக்கு மதம் மாறியது பற்றிக் கூறும்.[15] அதுவரை அவனுடைய வம்சத்தவர்கள் தங்கள் பழைய மதத்தையே கடைப்பிடித்து வந்திருந்தனர் என ஊகிக்க முடிகின்றது; அம்மதம் இந்து மதமோ என்பது தெரியவில்லை. ஆனால் நிச்சயம் இந்துமத வழிபாடு மாதோட்டம், திருகோணமலை, ஏறாவூர்(?) போன்ற பல இடங்களில் பிற்பட்ட நூற்றாண்டுகளிலும் தொடர்ந்து நிலவியது என்பதைப் பாளி நூல்கள் மூலமாகவும் பிற ஆதாரங்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது.

அரச ஆதரவு இல்லாமை இந்து மதத்தைப் பெரிதும் பாதித்தது என்பதில் ஐயமில்லை. வலிமை வாய்ந்த பௌத்த மன்னர்கள் அநுராதபுரத்தில் ஆட்சி நடத்தியபோது இப்படியான பாதிப்பு ஏற்பட்டது. உதாரணமாக, கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலே மகாயானச் செல்வாக்கினால் ஒரு பௌத்த தீவிரவாதியாக மாறிய மகாசேன மன்னன் கோகண்ண (திருகோணமலை), ஏரகாவில்ல (ஏறாவூர்?), பிராமண கலந்தனின் ஊர் (கிழக்கு மாகாணத்தில்) ஆகிய இடங்களில் பிராமணீயத் தெய்வங்களின் கோயில்களை அழித்து, (அவ்விடங்களில்) மூன்று விகாரைகளை அமைத்தான்[16] என்று மஹாவங்ஸ கூற, இதனை விரித்து மஹாவங்ஸத்தின் உரைநூல் கூறுவதாவது: ''இலங்கைத்தீவு அனைத்திலும் (பௌத்தத்தில்) நம்பிக்கையில்லாதோரது ஆலயங்களை அழித்து, சிவலிங்காதியவற்றை ஒழித்து புத்தசாசனத்தை நிறுவினான்.''[17] மகாசேனனின் இச் செயலால் இலங்கையில் முற்றாகச் சைவமதம் நசுக்கப்பட்டது என்று கூறுவதற்கில்லை. வெகுவிரைவிலே திரும்பவும் சைவ ஆலயங்கள் எழுச்சி பெற்றன. இது நடைபெறுவதற்கு நாட்டிலே குறிப்பிடத்தக்க அளவில் சைவ மக்கள் இருந்திருக்க வேண்டும்.

மகாசேனன் இறந்து அறுபது ஆண்டுகளுக்குள் மீண்டும் மாதோட்டத்திலும் திருகோணமலையிலும் இந்துக் கோயில்கள் எழுச்சியுற்றிருந்தன என்று கொள்ளத் தகவல்கள் கிடைக்கின்றன. இந்த இரண்டு இடங்களிலும் அவ்வாறு எழுச்சி பெற்றிருந்த கோயில்கள் திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் ஆகலாம். நான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கீர்த்தி ஸ்ரீ மேகன் அநுராதபுரத்தில் ஆண்டபோது மாதோட்டத்திலே ''அழகிய தேவாலயம்''

ஒன்று இருந்ததாக தாடாவங்ஸ என்ற இன்னெரு பாளி நூல் அறிவிக்கின்றது.[18] அதே ஆட்சிக்காலத்தில் மகாநாக இளவரசன் திருகோணமலையில் கடலை நோக்கிக்கொண்டு கிரியை ஒன்றில் பங்குபற்றியமை பற்றிச் சூளவங்ஸ கூறுகின்றது.[19] இதேபோன்ற கிரியை பின்னரும் ஏழாம் நூற்ருண்டில் திருகோணமலையில் இன்னேர் இளவரசனுல் (மானவர்மனுல்) நடத்தப்பட்டது என்றும், அத்தருணம் அவன் உருத்திராக்ஷ மாலை ஒன்றைக் கையிலேந்தி மந்திரம் ஒன்றை உச்சரிக்க மயில்மீது ஏறிய ஸ்கந்தகுமாரன் தோன்றி வரமளித்தான் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.[20] இவற்றை நோக்குமிடத்து, இந்த இளவரசர்கள் நடத்திய கிரியைகள் இந்து மதக் கிரியைகள் என்றும் திருகோணமலையில் சுவாமிமலையிலே திருக்கோணேஸ்வரத்தில் இவை நடைபெற்றிருக்கலாம் என்றும் தோன்றுகிறது. மகாசேனன் காலத்துக்குப் பின்னர் பௌத்த இளவரசர்களும் இந்துமதச் செல்வாக்கிற்கு உட்படும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கவேண்டும். அநுராதபுரத்தில் ஆண்ட மன்னர் சிலர் இந்துமதத்தை ஆதரித்தும் வந்தார்கள் என்பது சூளவங்ஸத்திலுள்ள வேறு சான்றுகளாலும் வெளிப்படுகின்றது. உதாரணமாக, எட்டாம் நூற்ருண்டில் ஆண்ட இரண்டாம் மகிந்த மன்னன் "அங்கும் இங்குமாக அழிந்திருந்த தேவாலயங்களைப் புனருத்தாரணம் செய்து (அவற்றுக்கு) விலையுயர்ந்த விக்கிரகங்களைச் செய்வித்து, பிராமணர்களுக்கு மன்னர்கள் உண்பது போன்ற இனிய உணவும் கொடுத்து, பொற்கிண்ணங்களிலே அவர்களுக்குச் சர்க்கரையுடன் பாலும் கொடுத்தான்" என்று சூளவங்ஸ வர்ணிக்கிறது.[21] மேலும், இரண்டாம் காசியப்பன் "சாதாரண மக்கள், பிக்குகள், பிராமணர்கள் ஆகியோர் அவரவர்க்குத் தகுந்த வாழ்க்கையை நடாத்த ஊக்குவித்து, உயிர்க்கொலை புரியக்கூடாது என்னும் கட்டளையை அமுல் செய்தான்"[22] என்று சூளவங்ஸ கூறுவதை நோக்குமிடத்து, எட்டாம் நூற்ருண்டு இலங்கையில் எந்தளவுக்குப் பிராமணர்க்கும் அதனுல் இந்துமதத்துக்கும் ஆதரவு கிடைத்தது என்பதை அறிய முடிகின்றது. பின்னர், ஒன்பதாம் நூற்ருண்டில் ஆட்சி புரிந்த இரண்டாம் சேனமன்னனும் பிராமணர்சளுக்குத் தானங்களை வழங்கி அவர்களை ஆதரித்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சூளவங்ஸத்திலே இவ் விஷயம் மிகைப்படுத்திப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "அவன் பொன்னுலான ஆயிரம் சாடிகளில் முத்துக்களை இட்டு நிரப்பி, ஒவ்வொன்றின் மேல் ஒவ்வொரு விலையுயர்ந்த இரத்தினக்கல்லை வைத்து, அவற்றை ஆயிரம் பிராமணர்க்கு இரத்தினக்கல் பதித்த பாத்திரங்களிலே பாற்சோறும் அத்துடன் பொன் நூலும் தானமாக வழங்கியபின் கொடுத்தான்.[23] இது அப்படியே உண்மை எனக் கொள்ள முடியாவிட்டாலும். மன்னன் பிராமணர்களை ஆதரித்தான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பௌத்தம் பரவுதற்கு முன்பிருந்த இந்துமதச்செல்வாக்குப் பொதுவாக அரசசபையிலிருந்து ஒருபோதும் நீங்கவில்லை என்றே தோன்றுகிறது. சில குடும்பக் கிரியைகளையும் சம்பிரதாயங்களையும் பௌத்த பிக்குகள் கவனிக்க முடியாதாகையால் இவற்றுக்காக மன்னர்கள் எப்பொழுதும் பிராமணர்களை ஆதரித்து வந்தனர் என்றே தோன்றுகிறது. ஐந்தாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு வந்த சீன யாத்திரிகனுகிய பாஹியன் இலங்கை மன்னன் கடுமையான பிராமணீய விதிகளின்படி தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டான் என அறிவித்துள்ளான்.[24] இவ் வழக்கங்கள் சிங்கள அரசுகள் மறையும்வரை நிலைத்திருந்தன.

இப்பொது மரபின் காரணமாக இந்துமதம் தொடர்ந்தும் வளர்ந்து வந்தது என்று கூறுவதுடன், ஆரும் நூற்ருண்டின் பின்பாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற சமய மறுமலர்ச்சியின் விளைவாகவும் இலங்கையிலே இந்துமதச் செல்வாக்கு, குறிப்பாகச் சைவசமயச் செல்வாக்கு, அதிகரித்தது எனலாம். இம் மறுமலர்ச்சிக் காலத்திலே தமிழ்நாட்டு வர்த்தகர்கள் கடல்

கடந்து வாணிபத்தில் பெரிதும் ஈடுபட, அவர்களுடன் கூடவே சமயச் செல்வாக்கும் இலங்கை, தென்கிழக்காசியா போன்ற இடங்களுக்குப் பரவியது. இலங்கையின் பிரதான துறைகளிலிருந்த பழைய சைவக் கோயில்கள் இந்த வர்த்தகர்களுடைய ஆதரவினால் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்; புதிய கோயில்களும் கட்டப்பட்டிருக்க வேண்டும். நிச்சயமாக இலங்கையின் இரு சைவக் கோயில்களாவது தமிழ் நாட்டாராலும் புனிதமான பழங் கோயில்கள் எனக் கருதப்படும் அளவுக்கு இங்கு சைவம் உயர்வு பெற்றிருந்தது. அக் கோயில்கள் தான் திருக்கேதீஸ்வரமும் கோணேஸ்வரமும். இவற்றை நோக்கி ஏழாம் நூற்றூண்டில் ஞானசம்பந்தர் பாடியமை பலரும் அறிந்ததே.[25] இதே காலமளவில் கரையோரங்களிலிருந்த முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற சைவக் கோயில்களும் பிரசித்தி பெற்றவையாய் இருந்திருக்கவேண்டும். இவற்றின் வரலாற்றைச் சரியாக ஆராய்வதற்கு விஞ்ஞானரீதியான சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன.

பௌத்த மதத்தில் இடம்பெற்ற இந்துத் தெய்வங்களின் கோயில்களும் இந்துக்களால் வழிபடப்பட்டு வந்தன எனலாம். பௌத்தம் பரவுவதற்கு முன்பிருந்தே வழிபடப்பட்ட பல தெய்வங்கள் காலப்போக்கில் மகாயான பௌத்தத்தின செல்வாக்கினுல் இலங்கைப் பௌத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத் தெய்வங்களுக்குச் சிறப்பான ஆலயங்களும் அமைக்கப்பட்டன, அவற்றுள் இலங்கையின் தென் கரையிலே தெவுந்தரையில் வருணதேவனுக்கு அமைக்கப்பட்ட கோயில் முக்கியமானது[26] வருணனை இலங்கையில் 'உபுல்வண்' (உற்பலவண்ணன்) என்ற பெயரால் வழங்கியதால் இக்கோயில் உபுல்வண கோயில் எனப்படும். ஏழாம் நூற்றூண்டில் முதலாம் தப்புலமன்னன் இத் தெய்வத்துக்குக் கோயிலமைத்தான் என அறிகின்றேம்.[27] விஷ்ணு, இந்திரன், பிரமன், அகஸ்தியர், யமன் (தர்ம), விபீஷணன், குபேரன் ஆகியோரும் இவ்வாறே பௌத்தர்களால் வழிபடப்பட்டனர். இந்திரன், வருணன், யமன், பிரமன் ஆகியோருடைய எட்டாம் ஒன்பதாம் நூற்றூண்டுகளைச் சேர்ந்த வெண்கல விக்கிரகங்கள் பௌத்த அழிபாடுகளிடையே கண்பிடிடிக்கப் பட்டுள்ளன.[28] ஒன்பதாம் நூற்றூண்டளவில் எழுதப்பட்ட பாலராமாயண, அநர்கராகவ என்ற இரு வடமொழி நாடகங்களிலே சிவனொளிபாதமலைக்கு அருகாமையில் அகஸ்தியர் ஆலயம் ஒன்று இருந்தமை பற்றிய குறிப்பு வருகின்றது.[29]

இவற்றை நோக்குமிடத்து, கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றூண்டுகளில் பரவலாகக் காணப்பட்ட இந்துமத வழிபாட்டு முறைகள் பௌத்தத்தின் வருகையினுல் பூரணமாக அழிந்துவிடவில்லை என்றே தோன்றுகிறது. பழைய இந்து வழிபாட்டுக்களின் பிரதான பண்புகளைக் கைவிடாது மக்கள் பௌத்தத்தை ஏற்றிருந்தனர். இதனுல் நவீன காலம்வரை இந்துத் தெய்வங்களின் வழிபாடு இலங்கைப் பௌத்தத்தின் இன்றியமையாத ஒரு பாகமாக இருந்துவந்துள்ளது.

இவ்வாறுக, இலங்கையின் வரலாற்றில், அநுராதபுரக் காலம் எனப்படும் ஆதிக் காலகட்டத்தில் இந்து மதம் அழியாத ஒரு மதமாக இந்துக்கள் மத்தியில் மட்டுமல்லாது பௌத்தர்கள் மத்தியிலும் செல்வாக்குடன் இருந்துவந்தாலும் ஏழாம் நூற்றூண்டுக்கு முற்பட்ட காலகட்டத்திற்கு அது பற்றிய தொல்பொருளாதாரங்கள் இதுவரை குறிப்பிடத்தக்க வகையிலே வெளிப்படுத்தப்படவில்லை. ஏழாம் நூற்றூண்டுக்கும் பத்தாம் நூற்றூண்டுக்கும் இடைப்பட்டவை என்று கருதக்கூடிய சாசனங்கள், சிற்பங்கள், கட்டிடங்கள் அநுராதபுரத்திலும் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன. ஏழாம் நூற்றூண்டுக்கு முன்னர் கிடைப்பவற்றுள் மிகிந்தலைச் சைத்தியத்தின் 'வாகல்கட' என்னும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டிலே கூடப் பிள்ளையார் வழிபாடு பிரபல்லியம் பெறுத ஒரு காலத்தில், அதாவது கி. பி. மூன்றும் நூற்றூண்டளவில், இலங்கையில் பௌத்தர்

மத்தியிலே அத் தெய்வத்துக்கு இருந்த செல்வாக்கை மிகிந்தலையிலுள்ள புடைப் புச் சிற்பம் காட்டுகின்றது எனலாம்.

அநுராதபுரத்தில் கிடைத்துள்ள இந்தத் தொல்பொருளாதாரங்கள் சென்ற நூற்ருண்டின் இறுதியில் H. C. P. Bell என்ற ஆராய்ச்சியாளரால் வெளிக்கொண ரப்பட்டவையாம். 1892இலும் 1893இலும் அவர் அங்கு அகழ்வாராய்ச்சி நடத்திய போது பல சைவக் கோயில்களின் அழி பாடுகளும் ஒருசில தமிழ்க் கல்வெட்டுக் களும் அநுராதபுரத்தின் வடக்குப் புறத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.[30] சைவக்கோயில் களின் இடிந்த பாகங்களும் பிராமணர் இல்லங்களின் பாகங்களும் அங்குமிங்கு மாகச் சிதறுண்டு காணப்பட்டன. பல சிவலிங்கங்களும் இவ்விடத்திலே அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டன. பெண் தெய்வ வழிபாட்டுக்குரிய கோயில்களும் காணப் பட்டன. இக்கோயில்கள் அனைத்தும் ஒரே வடிவினதாய் எளிமையான முறையில் பல்லவர்காலக் கோயில்களைப் போன்று அடித்தளங்களைக்கொண்டிருந்தன. அவற்றின் பிரதான பாகங்களாக அந்தராளம், அர்த்தமண்டபம், கர்ப் பக்கிருகம் ஆகிய மூன்றும் செங்கல் அத்தி வாரங்களைக் கொண்டு கட்டப்பட்டிருந் தன. இந்த அழிபாடுகளிடையே கிடைத்த இரண்டு தமிழ்க் கல்வெட்டுக்கள் அங் கிருந்த கோயில் ஒன்றில் ''நியதி ஒரு திரு வமிர்து மொரு நொந்தா விளக்கும்'' வைப்பதற்குச் செய்யப்பட்ட ஒழுங்குகளைக் கூறும்.[31] இவற்றுக்குக் குமாரகணம் என்ற நிர்வாகக் குழுவினர் பொறுப்பாக இருந் ததை நோக்குமிடத்து, தமிழ்நாட்டிற் போலவே இலங்கையிலும் சைவக் கோயில் களின் நிர்வாகம் அமைக்கப்பட்டிருந்தது என ஊகிக்க இடமுண்டு.

அநுராதபுரத்தின் வடக்குப் பாகத்தில் கிடைத்தவையாக மேலே குறிப்பிடப் பட்டுள்ள அழிபாடுகளை விட, அப் பழைய நகரின் வேறு பாகங்களிலும் அங்குமிங்கு மாகப் பல சைவ அழிபாடுகள் கிடைத் துள்ளன.[32] உதாரணமாக, வசவக்குளத் துக்கு வடக்கில் சிவலிங்கங்களும், அக் குளத்தின் மடைக்கு அருகாமையில் கல் அடித்தளமுடைய பிள்ளையார் கோயிலும், நடுநகரத்தில் (Citadel) நந்தியும் ஒரு லிங் கத்தின் பாகமும், தூபாராமத் தூபிக்கு வடக்கே ஒரு சிறிய கோயிலும் விஜயா ராமத்தில் சிவன், விஷ்ணு, சக்தி ஆகியோ ரது புடைப்புச் சிற்பங்களும் கண்டுபிடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத் திலே ஏழாம் நூற்றுண்டிற்குப் பின்பாக இந்துமதம் மேலும் வளர்ச்சியுற்றுக் காணப் பட்டது எனத் தோன்றுகிறது. கூடுதலாக வர்த்தகரும் பிறரும் தமிழ் நாட்டிலிருந்து அந்நகருக்கு அக்காலத்தில் வந்திருந்தமை யினுல் இந்நிலை உருவாகியிருக்க வேண்டும்.

இதேபோன்ற நிலை பழைய துறைக ளிலும் இருந்திருக்க வேண்டும். ஆனுல் இதுபற்றிய தொல்பொருளாதாரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. மாதோட்டம் எட்டாம் ஒன்பதாம் நூற்றுண்டுகளில் பௌத்தர்களாலும் ஒரு புனித இடமாகக் கருதப்பட்டது என்பது மட்டும் சிங்களச் சாசனங்களால் வெளிப்படுகின்றது. தமிழ்ச் சாசனங்களின் இறுதியிலே வரும் ஓம் படைக்கிளவிகளுள் ஒன்ருகி ''கங்கை யிடைக் குமரியிடைக் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைப் பெறக்கடவதாக வும்'' என்ற வாசகம் எவ்வாறு கங்கை யும் குமரியும் புனிதமானவை என்பதைக் காட்டிநிற்கின்றதோ, அதேபோலப் பத் தாம் நூற்றுண்டுச் சிங்களக் கல்வெட்டுக் கள் சிலவற்றில் காணப்படும் ஓம்படைக் கிளவி ''மாதோட்டத்தில் பசுவைக் கொன்ற பாவத்தைப் பெறக்கடவாராக'' என அமைகின்றது[33] இந்தியாவிலே கங்கை, குமரி போன்று இலங்கையிலே மாதோட் டம் ஒரு புனித தலமாகக் கருதப்பட்ட மையே இதற்குக் காரணம் என்பதில் ஐய மில்லை. அவ்வாறு அது கருதப்படுவதற்கு அங்கு சிறப்புப்பெற்ற பௌத்த தூபியோ வழிபாட்டுத் தலமோ இருந்ததாகச் சான் றில்லை. திருக்கேதீஸ்வரக் கோயில் அங் கிருந்தமைதான் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

இவ்வாருக அநுராதபுரக் காலம் பத் தாம் நூற்றுண்டின் இறுதியில் முடிவடைந்த

போது இந்துமதம் எதிர்ப்பில்லாது வளரக் கூடிய சூழ்நிலை காணப்பட்டது. பதினோராம் நூற்றுண்டில் சோழர் இலங்கையைக் கைப்பற்றியதன் விளைவாக மேலும் இந்து மத வளர்ச்சிக்குச் சாதகமான ஒரு சூழ்நிலை தோன்றியது. நாட்டின் பல்வேறு பாகங்களில் சைவ, வைஷ்ணவக் கோயில்களும் சதுர்வேதி மங்கலங்கள் எனப்பட்ட பிராமணக் குடியேற்றங்களும் அமைக்கப்பட்டன. இவற்றுக்குச் சோழமன்னர்களுடைய பெயர்களே பொதுவாக இடப்பட்டன. பழைய இந்துக் கோயில்களும் சோழராட்சியின்போது புதுப்பித்தும் பெருப்பித்தும் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக் கோயில்களின் நிர்வாகமும் அமைப்பு முறையும் தமிழ்நாட்டுக் கோயில்களில் இருந்த நிலையை ஒத்திருந்தன. ஆனுல் கோயில்கள் சிறியனவாகக் கட்டப்பட்டிருந்தன. இவற்றின் கட்டிடப்பாணி சோழரது தமிழ்நாட்டுக் கோயில்களின் கட்டிடப் பாணியாகவே அமைந்தது.[34]

சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட பெரும்பாலான கோயில்களின் அழிபாடுகள் இன்றும் பழைய நகரங்களிலே பேணப்பட்டுள்ளன. பதினோராம் நூற்றுண்டு தொடக்கம் பதின்மூன்றும் நூற்றுண்டு வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்த முப்பதுக்குக் குறையாத சைவ, வைஷ்ணவக் கோயில்களின் அழிபாடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவையில் மட்டும் பத்துச் சிவன் கோவில்களும், ஐந்து விஷ்ணு கோயில்களும் ஒரு காளி கோயிலும் காணப்படுகின்றன. இவற்றுட் பல சோழர் காலத்தவை. பொலன்னறுவையிலே குறிப்பிடத்தக்க தொகையினராக இந்துக்கள் வாழ்ந்தனர் என்பதை இவை உணர்த்துகின்றன.

பொலன்னறுவையிலுள்ள சோழர் காலக் கோயில்களுள் மிகச் சிறந்தது வானவன் மாதேவி ஈஸ்வரமாகும். வானவன் மாதேவி என்ற பெயரைப் பெற்ற பல சோழ அரசியர் இருந்திருக்கின்றனர். எனினும் பொலன்னறுவைக் கோவில் முதலாம் ராஜராஜ சோழனுடைய பட்டத்தரசியின் பெயரால் அமைக்கப்பட்டது எனக் கொள்ள இடமுண்டு. இந்த அழகிய கோயில் அழியாது முழுமையாகப் பேணப்பட்டுள்ளது. இதனைத்தான் பொதுவாக இரண்டாவது சிவ தேவாலயம் என்பர்.

பதவியாவிலும் பல சோழர்காலக் கோயில்களும் பிற்பட்ட கோயில்களும் அழிந்த நிலையிலே காணப்படுகின்றன. பதவியாவுக்கு ஸ்ரீபதி கிராமம் என்ற இந்துப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்த ஒரு சாசனத்தின் மூலம் அறிகின்றேம்.[35] இங்குள்ள மிகப் பழைய கோயில் எனக் கருதப்படக்கூடியது இரவிகுலமாணிக்கஈஸ்வரம் என்பதாகும்.[36] இரவிகுலமாணிக்கம் என்பது முதலாம் ராஜராஜனின் விருதுகளுள் ஒன்றாகும்.

சோழர்காலத்துப் பிற கோயில்களுள் மாதோட்டத்திலிருந்த ராஜராஜேஸ்வரம், திருவிராமீஸ்வரம், அத்தாக்கடையிலிருந்த உத்தம சோழஈஸ்வரம், மதிரிகிரியாவில் இருந்த பண்டிதசோழ ஈஸ்வரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றின் அழிபாடுகள் இன்று கிடைக்கவில்லை. சாசனங்கள் மூலமாகவே இவற்றைப்பற்றி அறிகின்றேம். மாகல என்ற இடத்திலிருந்து விக்கிரமசலாமேக ஈஸ்வரமும் சோழர் காலத்ததாக இருக்கலாம். இக் கோயிலின் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பௌத்த கோயில் ஒன்று இன்றும் உள்ளது. யாழ்ப்பாணத்திலும் சோழர் காலத்துக் கோயில் ஒன்றின் (சிவ வேளை அதற்கு முற்பட்ட காலத்ததாகவும் இருக்கலாம்) கல்வெட்டு நமக்குக் கிடைத்துள்ளது. ஆனுல் இது சேதமடைந்திருப்பதால் கோயில் பெயரை அறிய முடியவில்லை.

கோயில்களின் அழிபாடுகளைவிடப் பல இந்து விக்கிரகங்களும் கல்லிலும் வெண்கலத்திலும் செய்யப்பட்டவையாய்ப் பல இடங்களிலே கிடைத்துள்ளன.[37] பொலன்னறுவையிலும் பதவியாவிலும் கிடைந்த வெண்கல விக்கிரகங்களுட் பல சிறந்த கலை வேலைப்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

சோழர் காலத்தில் இலங்கையிலே பல பிராமணக் குடியேற்றங்களும் அமைக்கப்

பட்டன. இவற்றைப் பொதுவாகச் சதுர்வேதி மங்கலம் என்பர். கந்தளாயில் ராஜராஜச் சதுர்வேதி மங்கலம், மகாகிரிந்தேகம என்ற இடத்தில் ஐயங்கொண்ட சலாமேகச் சதுர்வேதி மங்கலம் போன்றவை அமைக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக அடுத்து வரும் நூற்றுண்டில் பிராமணர்களுடைய செல்வாக்கு அதிகரித்தது எனலாம்.

சோழராட்சிக்குப் பின் பொலன்னறுவையிலே சிங்கள பௌத்த மன்னர்களுடைய ஆட்சி மீண்டும் தொடங்கியபோதும், இந்துமதம் இவர்களாலே ஆதரிக்கப்பட்டு மேலும் அதன் செல்வாக்குப் பரவியது என்றே கூறவேண்டும். சோழரை வெற்றிகொண்டு ''புத்த சாசனம் ரக்ஷிக்க வேண்டி சங்கநியோகத்தால் திருமுடிசூடி'' இலங்கையை ஆண்ட முதலாம் விஜயபாகுகூட இந்துமதத்தை ஆதரித்தான் என்பது அவன் பெயராலே கந்தளாயில் விஜயராஜ ஈஸ்வரம் என்னும் கோயில் இருந்தமையால் வெளிப்படுகின்றது.[38] இவனுக்குப்பின் ஆண்ட இரண்டாம் கஜபாகு, விக்கிரமபாகு ஆகியோர் பௌத்தத்துடன் சைவத்தையும் தழுவியவராய் ஆண்டனரோ என ஐயுறத்தக்க வகையிலே சைவமதச் சார்புடையோராய் விளங்கினர். கஜபாகு கந்தளாயிலிருந்த பிராமணர் குடியிருப்புடன் திருகோணமலைக் கோணேசர் கோயிலுடன் நெருங்கிய தொடர்புடையவனுகக் காணப்பட, விக்கிரமபாகு தன்னைப் 'பார்வதீபதி தத்தாஸீர் வீரவிருஷ' (பார்வதிநாதனின் கிருபை பெற்ற வீர இடபம்) என வர்ணித்துக்கொண்டான்.[39] இதனுல், சூளவங்ஸ ஆசிரியர் தம்மகித்தி தேரர் இவர்கள் பல சமயங்களை வளர்த்தனர் எனக் குறைபட எழுதியுள்ளார்[40]. இவர்களுக்குப்பின் வந்த முதலாம் பராக்கிரமபாகுவின் அரண்மனையிலே பிராமணர்கள் பல்வகைக் கிரியைகளைப் புரிந்தனர்.[41] இவன் பதின்மூன்று கோயில்களைக் கட்டுவித்து, 103 கோயில்களைப் புனருத்தாரணஞ் செய்து தொண்டாற்றினுன் எனச் சூளவங்ஸ கூறுவதால், இவனும் இந்துமதத்தை ஆதரித்தான் என அறியலாம்[40].

இவனுக்குப் பின்வந்த கலிங்க மன்னனுகிய நிஸ்ஸங்க மல்லன் பிராமண சத்திரம் என்ற ஒரு மடத்தினைக் கட்டுவித்தும் பிராமணர்களை வேறு வழிகளில் ஆதரித்தும் வந்தான்.[43] கந்தளாயிலே பார்வதி சத்திரம் என்ற சத்திரத்தினையும் இவன் ஆதரித்தான்.[44] கந்தளாய் இவனுடைய காலத்திலே சதுர்வேதி பிராமணபுரம் எனப்பட்டது.[45] தம்பதெனியைத் தலைநகராகக் கொண்ட இரண்டாம் பராக்கிரமபாகுவும் பொலன்னறுவையிலே பல கோயில்களைக் கட்டுவித்தான் எனச் சூளவங்ஸ கூறும்.

பொலன்னறுவைக் காலத்துச் சிங்கள இலக்கியத்திலும் கோயில்கள் பற்றிய ஒரு சில குறிப்புகள் காணப்படுகின்றன. ஸத்தர்மாலங்காரய என்ற நூலிலே அநுராதபுரத்துக்கு அருகாமையில் 'புரதெவியா கோவில்' (நகரத்தெய்வத்தின் கோயில்) ஒன்று இருந்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது, கவனிக்கத்தக்கது. இப்படியான காவற்தெய்வங்களின் கோயில்கள் இலங்கையில் வேறிடங்களிலும் இருந்தன என அறிய முடிகின்றது[46]. சிறிது பிற்பட்ட காலத்துச் சிங்களக் கல்வெட்டு ஒன்று தெவிநுவரையில் இருந்த நகரீசர் (நகரத் தெய்வம்) கோயிலைக் குறிப்பிடுகின்றது[47].

பொலன்னறுவையின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ்ப் பிரதேசங்களாகிய யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலே இந்து மன்னர்களும் சிற்றரசர்களும் ஆட்சிநடத்தத் தனிப்பட இந்துமதத்தின் செல்வாக்கே மேலோங்கியது. மட்டக்களப்பிலே திருக்கோவில் பாண்டியர் பாணியிலே கட்டப்பட்டது. கோணேஸ்வரர் கோயிலும் பாண்டியர் பாணியிலே திருத்திக் கட்டப்பட்டிருக்க வேண்டும். பதினேழாம் நூற்றுண்டில் போத்துக்கீசர் இக்கோயிலை அழித்தபோது, இராமேஸ்வரத்துக்குச் செல்லும் யாத்திரீகர்களைக் காட்டிலும் கூடுதலான யாத்திரிகர்கள் செல்லும் பெருங் கோயிலாகக் கோணேஸ்வரம் விளங்கிற்றெனப் போர்த்துக்கீச ஆதாரங்கள் அறிவிக்கின்றன.[48]

தமிழ்ப் பிரதேசங்களிற் போலவே தொடர்ந்தும் சிங்களப் பிரதேசங்களில் இந்துமதம் செல்வாக்குக்குன்றாது காணப் பட்டது எனலாம், அரசியற்பகை எவ்வாறு அமைந்தாலும் அது சமயங்களுக்கு இடையி லான உறவினைப் பாதிக்கவில்லை. பதின் மூன்றாம் நூற்றாண்டின் பின்னர் இஸ்லா மியர் படையெடுப்புக்களினாலே பாதிக்கப் பட்ட பிராமணரும் பிறரும் இலங்கையின் இராச்சியங்களிலே தஞ்சம் புகுந்தனர். இந்து மன்னர்களைப் போலப் பௌத்த மன்னர்களும் இவர்களுக்கு நிலத்தானங்கள் வழங்கினர், கோட்டையிலிருந்து ஆண்ட ஆறாவது பராக்கிரமபாகு முன்னேஸ்வரத் திலும் தெவுந்தரையிலும் பிராமணர்க்கு வழங்கிய தானங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்[49], ஜயவர்த்தனபுரம் எனப் பட்ட கோட்டைத் தலைநகரின் வெளியே அநுராதபுரத்திலிருந்த காவற்தெய்வத்தின் கோயிலைப் போன்று, ஓர் ஈஸ்வரன் கோயில் அமைந்திருந்தது. அங்கு வாத்தியங்கள் இசைக்கத் தமிழ்மொழியிலே தேவாரங்கள் பாடப்பட்டன எனச் சிங்கள நூலாகிய ஸலலிஹினி ஸந்தேஸ கூறும்.[50] தென் மாகாணத்திலே அக்காலத்தில் தெவுந் தரைக்கும் பெந்தொட்டைக்கும் இடையில் நகரீசர் கோயில், கணேசர் கோயில், காளிகோயில், நாகர் கோயில் ஆகிய இந்துக் கோயில்கள் இருந்தன எனப் பிற சிங்களக் கல்வெட்டுக்களாலும் நூல்களா லும் அறியலாம்[51]. ஆறாம் விஜயபாகுவின் காலத்தில் கொழும்பு மாவட்டத்தில் ஒரு கந்தசுவாமி கோயில் இருந்தது என அங்கு கிடைத்த ஒரு தமிழ்க் கல்வெட்டால் அறிய லாம்,[52] இதே காலமளவில் களுத்துறையில் ஒரு காளிகோயில் காணப்பட்டது,[53] இவற்றை நோக்குமிடத்து இலங்கையின் நாலாபுறக் கரையோரத்திலும் இந்துக் கோயில்கள் இடைக்காலத்திலே அமைக்கப் பட்டிருந்தன எனலாம்.

சிங்களப் பிரதேசங்களில் படிப்படியாக வளர்ந்துவந்த சைவமதச் செல்வாக்குப் பதினாறாம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. அந்த நூற்றாண்டிலே போர்த் துக்கீசரைக் கடுமையாக எதிர்த்துப் போரா டிய சீதாவாக்கையின் மன்னனாகிய முதலாம் ராஜஸிங்ஹ தனது பாரம்பரிய மதமாகிய பௌத்தத்தை விட்டுச் சைவத்தைத் தழுவினான். அந்தளவுக்கு அரண்மனையிலே இந்துமதச் செல்வாக்கு மேலோங்கியிருந் திருக்க வேண்டும். கி. பி. 1577இல் மத கொடையின் பத்தினி கோயிலுக்கு நித்திய கிரியைகளுக்காக இம் மன்னன் கொடுத்த நிலத்தானம் பற்றி ஒரு சிங்களச் சாசனம் கூறுகின்றது[54] சீதாவக்கையில் இவன் ஓர் அழகிய கோயிலையும் கட்ட ஆரம்பித்திருந் தான். இது கட்டிமுடிக்கப்பெறாத கோயி லாக, பெறெண்டி கோயில் என்னும் பெயரால், இன்றும் காணப்படுகிறது. இது விஜயநகரக் கட்டிடப் பாணியில் அமைந் துள்ளது. ராஜஸிங்ஹ மன்னன் சிவனொளி பாத மலையின் வருமானங்களைக்கூடச் சைவத்துறவியருக்கு வழங்கினான் எனச் சூளவங்ஸ கூறுகின்றது,[55]

இவ்வாறாக, போர்த்துக்கீசர் காலம் வரை படிப்படியாக இந்துமதம் நாடு முழுவதிலும் செல்வாக்குப் பெற்று வளர்ச்சி யடைந்து வந்து, போர்த்துக்கீசர் வருகை யினால் பெரிதும் பாதிக்கப்பட்டது, அது வரை பௌத்த மன்னரும் இந்து மன்னரும் ஒருங்கே அதனை ஆதரித்து வந்தனர். பௌத்தப் பொதுமக்கள் பௌத்தத்துடன் இந்துமத வழிபாட்டு அம்சங்களையும் ஏற் றிருந்தனர். மகாசேனன் காலம் மட்டுமே விதிவிலக்காகக் காணப்படுகின்றது. போர்த்துக்கீச, ஒல்லாந்தர் காலத்திலே சிங்களவர் வாழ்ந்த கரையோரப் பகுதி களில் இந்துமதம் ஆதரிப்பார் இல்லாது அழிவுற்றதோடு, ஐரோப்பியருடைய ஆக் கிரமிப்பினாலும் அழிவுற்றது, கோயில்கள் பல கரையோரங்களிலே காணப்பட்ட தால் அவை போர்த்துக்கீசர் தாக்குதல் களுக்கு இலகுவில் இலக்காகின. உள்ளே இருந்த கோயில்கள் பல பௌத்த வழி பாட்டுத் தலங்களாக மெல்லமெல்ல மாறி விட்டன.

### அடிக்குறிப்புகள்

1. K, Indrapala, 'Hinduism in Ancient Ceylon: Epigraphic Sources of its History', *Hindu Dharma 1961—62* (Hindu Students' Union, University of Ceylon), Peradeniya, 1962, pp. 15—18;

   'Hindu Temples of Ancient Ceylon', *Hindu Dharma 1962—63*, Peradeniya, 1963, pp. 23—30.
2. S. Paranavitana, *Inscriptions of Ceylon*, I, Colombo 1970, pp. lxviii, 3, 57, 60, 61.
3. மேற்படி, பக். 83, இல. 1059.
4. மேற்படி, பக். 83, இல. 1060.
5. *Mahavamsa*, ed. W. Geiger, Colombo. 1950, 9 : 2, 10 : 23, 79.
6. S. Paranavitana, *Inscriptions of Ceylon*, p. 57.
7. மேற்படி பக். 60.
8. மேற்படி பக். 61.
9. *Mahavamsa*, 10 : 29, 11 : 1, XXI : 1.
10. மேற்படி, 10 : 102.
11. *Mahavamsa-tika* (Vamsatthapakasini), ed. G. P. Malalasekara, I, London 1935, p. 207.
12. *Mahabodhivamsa*, ed. S. A. Strong, London 1891, p. 135.
13. *Mahavamsa*, 10 : 90.
14. S. Paranavitana, *Inscriptions of Ceylon*, p. 7.
15. S Paranavitana. 'Brahmi Inscriptions in Sinhalese Verse; *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*, *XXXVI*, 1945, No. 98, p. 61, p. 58; பி. ஏ. ரி. குணசிங்ஹ, புராதன ரோகண ராஜ்யய, (சிங்களம்) நுகே கொட 1968, பக். 153.
16. *Mahavamsa*, 37 : 4.
17. *Mahavamsa-tika*, p. 685.
18. *Dathavamsa*, ed. B. C. Law, Lahore 1925, p 42.
19. *Culavamsa*, ed. W. Geiger, Colombo 1953, 41 : 80.
20. மேற்படி, 57 : 4—11.
21. மேற்படி, 48 : 143—144.
22. மேற்படி, 48 : 23.
23. மேற்படி, 51 : 65—67.
24. Samuel Beal, *Buddhist Records of the Western World*, I, Boston 1885, p. lxxiv.
25. திருஞானசம்பந்தர் தேவாரத் திருப்பதிகங்கள், திருமுறை 2, பதிகம் 243, கழக வெளியீடு, (சென்னை) பக். 518—520.
26. S. Paranavitana, *The Shrine of Upulvan at Devundara*, Colombo 1953, pp. 1—5.
27. மேற்படி.
28. S. Paranavitana, *The God of Adam's Peak*, Ascona, 1957, pp. 49—52.
29. மேற்படி பக். 18—20.
30. H. C. P. Bell, *Archaeological Survey of Ceylon Annual Report for 1892*, p. 5; *for 1893*, p. 5.

31. K. Indrapala. 'Two Inscriptions from the Hindu Ruins, Anuradhapura', *Epigraphia Tamilica (EZ)*, I, Jaffna 1971, pp. 1—5; கா. இந்திரபாலா, 'அநுராத புரத்திலுள்ள குமாரகணத்துப் பேருரார் கல்வெட்டுக்கள்', **சிந்தனை, II, 1,** *பேராதனை 1968, பக். 19—23.*

32. H. C. P. Bell, *முன் குறிப்பிடப்பட்ட அறிக்கைகள், 1890ஆம் ஆண்டறிக்கை, பக். 2, 3; 1891ஆம் ஆண்டறிக்கை, பக். 5; 1898ஆம் ஆண்டறிக்கை பக். 3,*

33 S. Paranavitana, 'Inscriptions on the Stone Canoe within the Citadel, Anuradhapura, *E2*, III, London 1933, p. 132; 'Kataragama Inscriptions', *Ibid.*, p. 225.

34. கா. இந்திரபாலா, **இலங்கையில் திராவிடக் கட்டிடக் கலை,** *கொழும்பு 1970, பக். 10—20. சோழர் காலக் கோயில்கள் பற்றிய விரிவான தகவல்களை இதிலே காண்க.*

35. கா. இந்திரபாலா, **யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்,** *கண்டி 1972, பக். 76.*

36. K. Indrapala 'An inscription of the time of Rajaraja Cola I from Padaviya', *Epigraphia Tamilica*, I, 1, p 33

37. Ananda K. Coomaraswamy, *Bronzes from Ceylon*, Colombo 1914, p. 9; C. E. Godakumbure, *Polonnaruva Bronzes*, Colombo (n. d.).

38. S. Paranavitana, 'A Tamil Slab Inscription from Palamottai', *EZ*, IV, p 191.

39. S. Paranavitana, 'Kahambiliyava (Kavudulu-vara) Slab Inscription of Vikramababu I', *E2*, V, p. 407

40. *Culavamsa*, 70 : 53—54

41. மேற்படி, *62 : 33 ff*

42. மேற்படி, *79 : 19—22.*

43. D. M. de Z. Wickremasinghe, 'Polonnaruva : Priti-danaka Mandapa Rock Inscription', *EZ*, II, p. 174.

44. D. M. de Z. Wickremasinghe, 'Kantalai Gal Asana Inscription of Kitti : Nissanka Malla', *EZ*, II, p. 287—288.

45. மேற்படி.

46. ஸத்தர்மா லங்காரய, பதிப்பு : ஸத்தாதிஸ்ஸ தேரர், கொழும்பு *1951*, (சிங்களம்) செய்யுள் *471*.

47. S. Paranavitana, *The Shrine of Upulvan at Devundara*, p. 75.

48. F. de Queyroz, *The Temporal and Spiritual Conquest of Ceylon*, Tr. S. G. Perera, I, Colombo 1930, p. 236.

49. S. Paranavitana. *The Shrine of Upulvan at Devundara*, p. 71.
A. Velupillai. *Ceylon Tamil Inscriptions*, I, Peradeniya 1971, p. 37.

50. ஸலலிஹினி ஸந்தேஸ, செய்யுள் *22*.

51. கோகில சந்தேஸ, செய்யுள் *100*; பரவி சந்தேஸ, செய்யுள் *68*; கோகில சந்தேஸ, செய்யுள் *49*; மேலேயுள்ள அடிக்குறிப்பு *47*.

52. S. Paranavitana, 'Epigraphical Summary', *Ceylon Journal of Science*. G, II. Oct. 1933. p. 191.

53. A. Veluppillai, *op. cit.*, p. 44.

54. H. C. P. Bell, *Report on the Kegalle District*, Colombo 1892, p. 58.

55. *Culavamsa*, 93 : 12.


# வைரவிழா நிதியம்

செயலர்



திரு. செ. சந்திரசேகரி

பொருளர்



திரு. பி. நடராசா

உ

# மகாஜனக் கல்லூரி
## வைரவிழா நிதியம்

### அலுவலர்கள் :

**1968 முதல்**

தலைவர்: திரு. தெ. து. ஜயரத்தினம் (அதிபர்)
செயலர்: திரு. பொ. கனகசபாபதி
பொருளர்: திரு. ஆ. இராமசாமி

**இடைக்காலத் தலைவர்கள் :**

திரு. மா. மகாதேவன் (அதிபர்)
,, பொ. ச. குமாரசுவாமி (அதிபர்)
,, சு. சிவசுப்பிரமணியம் (அதிபர்)

**1976 முதல்**

தலைவர்: திரு. பொ. கனகசபாபதி (அதிபர்)
செயலர்: ,, செ. சந்திரசேகரி
பொருளர்: ,, பி நடராசா

### செயற்குழு :

திரு. கு. பாலசிங்கம் (இ. நி. சே.)
,, சி. கந்தையா
,, து. தர்மராஜா (இ, நி. சே.)
கலாநிதி வி. பேரம்பலம்
திரு. இ. பாஸ்கரலிங்கம் (இ. நி. சே.)
,, எம். கார்த்திகேசு
,, க. சந்திரன்
,, அ. இரத்தினம்
திருமதி இ. ஜி. செல்வநாயகம்
திரு. கே. எஸ். நடராஜா
,, சு. வெற்றிவேலாயுதம்
,, சி. அ. சிவபாதம்
,, எம். அம்பலவாணர்
,, பீ. நவரத்தினம்

திரு. ச. சுப்பிரமணியசுவாமி
,, ஆ. ஞானசேகரம்
,, த. பொன்னம்பலம்
,, மா. மகாதேவன்
,, செ. சின்னத்தம்பி
,, த. சண்முகசுந்தரம்
,, வே. சிவசுப்பிரமணியம்
,, த. பூ. முருகையா
,, நா. இராமநாதன்
,, ந. நடராசா
,, என். பொன்னுராசா
,, பீ. சிவசுப்பிரமணியம்
வைத்தியகலாநிதி நா. சிவசுப்பிரமணியம்
,, சி. சுப்பிரமணியம்

திரு. க. நல்லைநாதன் (இ. நி. சே.)
,, வ. சரவணமுத்து
,, க. சண்முகரத்தினம்
திரு. ம. சிதம்பரநாதன்
,, எஸ். சின்னத்தம்பி
,, எம். சின்னத்தம்பி
,, க. தர்மலிங்கம் (ச. நீ.)
,, செ. இராமலிங்கம்
,, பீ. எஸ். இராசநாயகம்
,, சி. நாகலிங்கம்
,, எஸ் அருணாசலம் (ச. நீ.)
,, ஏ. கனகசபை
,, எம். பசுபதி
,, வே. தியாகராசா
,, சே. ஐ. சத்தியோசாதம்
,, எஸ். குலராசசிங்கம்
,, செ. வரதராசப்பெருமாள்

திருமதி த. சுந்தரராசா
திரு. எஸ். கனகராசா
,, பி. நடராசா
,, ஆ. சிவநேசச்செல்வன்
,, ஆ. மகேந்திரன்
,, த. இலங்காநேசன் (இ. நி. சே.)
,, செ. சந்திரசேகரி
,, வ. மகாலிங்கம்
,, சி. யோகநாதர்
,, சி. கைலைமகான்
,, ச. விநாயகரத்தினம்
*,, து. உருத்திரமூர்த்தி
*,, க. இ கதிர்காமலிங்கம்
*,, க. சோதிநாகரத்தினம்
*,, க. வைத்திலிங்கம்
*பேராசிரியர் பே. கனகசபாபதி
*திரு. ஆ. திருஞானசம்பந்தர்

---

* அமரரானோர்

# தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
# வைரவிழா நிதியம்

(நிதிப்பட்டியலில் எழுதிய முழுத்தொகையும் வழங்கினோர்)

| | ரூ. ச. |
|---|---|
| திரு. ஆ. திருஞானசம்பந்தர், டொலர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை | 15000-00 |
| திரு. கே. தருமலிங்கம், மினுவாங்கொடை | 5000-00 |
| திரு. ஆ. சின்னத்தம்பியும் புதல்வர்களும், 'சுடரொளி', கொல்லங்கலட்டி தெல்லிப்பழை | 5000-00 |
| திரு. கே. ஜெயபாலசிங்கம். காங்கேசன்துறை | 5000-00 |
| திரு. இ. சின்னத்துரை, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 2000-00 |
| வைத்தியகலாநிதி தி. இராசேந்திரம், ஈஸ்வரி மருத்துவ நிலையம் காங்கேசன்துறை | 2000-00 |
| திரு. அ. அப்புத்துரை. 'நீலகிரி', கே. கே. எஸ். | 2000-00 |
| திருமதி எஸ். குகனேந்திரன், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 1500-00 |
| திரு. பி. தனபாலசிங்கம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை | 1100-00 |
| திருமதி பி. தங்கராஜா பெட்போட் மருத்துவநிலையம், இங்கிலாந்து | 1026-44 |
| திரு. க. கனகராசா, மில்க்வைற் தொழிலகம், யாழ்ப்பாணம் | 1001-00 |
| திரு. எஸ். யோகலிங்கம், 310, ஏயம்பெட்ட வீதி, கொழும்பு 13 | 1001-00 |
| திரு. இ. கந்தையா, சிவநிலையம், தெல்லிப்பழை | 1001-00 |
| சிற்பக்கலாநிதி செ. சிவப்பிரகாசம், 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் | 1001-00 |
| திருமதி ந. ஞானலிங்கம், கணேசவில்லா, தெல்லிப்பழை | 1001-00 |
| திரு. ரி. சத்திஸ்வரன், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 1000-00 |
| வைத்தியகலாநிதி க. அழகேசன், விழிசிட்டி, தெல்லிபபழை | 1000-00 |
| திரு. எஸ். விஸ்வநாதன், 39 லேயாட்ஸ் வீதி, கொழும்பு 2 | 1000-00 |
| திரு. பொ. கண்ணப்பர், தெல்லிப்பழை | 1000-00 |
| வைத்தியகலாநிதி ம. அருமைநாயகம், பன்னாலை. தெல்லிப்பழை | 1000-00 |
| திரு வி. இளஞ்சென்னி, 225 ரேஸ்கேவன், மக்மறே அல்பேட், கனடா | 1000-00 |
| வைத்தியகலாநிதி என், புவனேந்திரன், அரசினர் மருத்துவ நிலையம், குருணாகல் | 1000-00 |
| வைத்தியகலாநிதி க. சிவபாலன், அக்கராயன் | 1000-00 |
| திரு. ந. இராமநாதன் குடும்பத்தினர், வீமன்காமம், தெல்லிப்பழை | 1000-00 |
| திரு. என். இராசலிங்கம், 'பூம்புகார்' பண்டத்தரிப்பு | 1000-00 |
| திரு. கே. சண்முகசுந்தரம், மாதகல் | 505-00 |
| திரு. எஸ். ஆறுமுகநாதன், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை | 501-00 |
| வைத்தியகலாநிதி வ. சிவஞானவேல், பன்னாலை, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. ஜே. பீ. பேர்னாண்டஸ் பலாலிதெற்கு, வயாவிளான் | 500-00 |
| திரு. இ. மகேசன், ஆதிமயிலிட்டி, காங்கேசன்துறை | 500-00 |
| திரு. இ. பாஸ்கரலிங்கம், உவாட்பிளேஸ். கொழும்பு | 500-00 |
| திரு. ந. ஜிவேஸ்வரா சட்டத்தரணி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை | 500-00 |
| வைத்தியகலாநிதி செல்வி எஸ். கந்தப்பிள்ளை, அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் | 500-00 |
| திரு. தி. சரவணபவன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. பொ. கந்தையனார், சிவபுரம், கொடிகாமம் | 500-00 |
| திரு. கே. சுப்பையா, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. எஸ். பி. வெற்றிவேலு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 500-00 |
| திரு. சி. சிதம்பரநாதன், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. இராஜ சண்முகரத்தினம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. எம். சுந்தரலிங்கம், நெற்களஞ்சியம், பரந்தன் | 500-00 |
| திருமதி ரீ. ஜோன்ராஜா, அச்சுவேலி | 500-00 |

| | ரூ. ச. |
|---|---|
| திரு. சி. சபாரத்தினம், பன்னாலை, தெல்லிப்பழை | 500-00 |
| வைத்தியகலாநிதி செல்வி எஸ். விநாயகமூர்த்தி, பன்னாலை, தெல்லிப்பழை | 500-00 |
| திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன். புன்னாலைக்கட்டுவன் | 500-00 |
| திரு. ஆ. மகேந்திரன், வீமன்காமம், தெல்லிப்பழை | 500-00 |
| திரு. ரீ. கே. பாலசிங்கம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 500-00 |

## (கொடுக்க இசைந்த தொகையும், கொடுத்த தொகையும்)

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| வைத்தியகலநிதி சி, பாலச்சந்திரன், அளவெட்டி வடக்கு, அளவெட்டி | 1000 | 500 |
| ,, ஆ. சிவகணேசநாதன், அம்பனை, தெல்லிப்பழை | 1100 | 600 |
| ,, வி. ஆனந்தநடேசன், அரசினர் மருத்துவ நிலையம், குருநாகல் | 1000 | 500 |
| திரு. பீ. பொன்னையா, போட்மோர், அக்கரப்பத்தன | 1000 | 500 |
| வைத்தியகலாநிதி வி. அரியநாயகம், குருவீதி, காங்கேசன்துறை | 1000 | 100 |
| ,, பி. சிவயோகம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி | 1000 | 250 |
| திரு. சிறிவிக்னேஸ்வரராசா, லக்ஷ்மி மில்ஸ், வவுனியா | 1000 | |
| திரு. ஏ. கனகசபை, தெல்லிப்பழை | 1000 | 100 |
| திரு. அ. இரத்தினம் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் | 1000 | |
| திரு. கே. ஜனநாயகம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை | 1000 | |
| திரு, த. பொன்னம்பலம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை | 1000 | |
| திருமதி ஜி. கனகரத்தினம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை | 1000 | 500 |
| திரு. திருமதி ஜீவானந்தன் 20 வுட்பறி வீதி, ரூற்றிங் புரோட்வே, லண்டன் | 1000 | |
| திரு. வி. துரைசாமி 'லக்ஷ்மி திலகம்', மயிலிட்டி | 2501 | |
| திரு. ஜே. குணரத்தினம், சீமா சில்க் தொழிற்சாலை, திருநெல்வேலி | | 1500 |
| திரு. எஸ். சேனாதிராசா, தெல்லி கிழக்கு, தெல்லிப்பழை | 2001 | |
| திரு. இ. கணேசு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 1001 | 500 |
| திரு. க. சங்கரப்பிள்ளை, தேநீச்சாலை, மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை | 1001 | 350 |
| வைத்தியகலாநிதி ரீ. கணநாதன் தெல்லிப்பழை | 1001 | 200 |
| திரு. வ. சண்முகலிங்கம், அம்பனை, தெல்லிப்பழை | 1001 | |
| திரு, எஸ். குமாரசிங்கம், இளவாலை | 1000 | |
| வைத்தியகலாநிதி ச. மாணிக்கம், மல்லாகம் | 1001 | |
| வைத்தியகலாநிதி சி, சிவசுப்பிரமணியம் 96, 1-ம் குறுக்குத்தெரு | 1001 | 500 |
| திரு. க. நல்லைநாதன், 5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 1000 | |
| திரு. ஆர். வேலாயுதன், அரச உரயாக்கம், கொழும்பு 11. | 1000 | |
| திரு, எஸ். சரவணபவன், டச்சு வீதி, காங்கேசன்துறை | 1000 | |
| வைத்தியகலாநிதி கே. அரசலிங்கம், கொழும்பு | 1000 | |
| திரு. நா. திருநாவுக்கரசு, காங்கேசன் துறை | 1000 | |
| திரு. ஆர். ஜே. செல்வரத்தினம், மாவிட்டபுரம் | | 1000 |
| திரு. கே. நவரத்தினம், தெல்லிப்பழை கிழக்கு. தெல்லிப்பழை | 1000 | 300 |
| வைத்தியகலாநிதி எஸ். சுப்பிரமணியற், 10, இந்து மகளிர் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் | 1500 | 500 |
| தி. எஸ். சிவபாஸ்கரன், மாங்கொல்லை, காங்கேசன்துறை | 501 | |
| திரு. எஸ், செந்திநாதன், மாவிட்டபுரம், தெல்லிப்பழை | 750 | |
| திரு. கே, தேவசிகாமணி, அல்வாய் மேற்கு | 500 | 50 |
| திரு. கே. திருஞானச்சந்திரன், 84, லோறிஸ் வீதி, கொழும்பு | 500 | |
| வைத்தியகலாநிதி ஆ, சிவபாலசுந்தரம், தேவஸ்தான் இளவாலை | 500 | |
| திரு. நா. பூபாலசிங்கம், கருகம்பனை, காங்கேசன்துறை | 500 | |
| திரு. க, சந்தரன், பொதுமுகாமையாளர், ஐ. பீ. எம். - சிலிங்கே ஹவுஸ் கொழும்பு | 500 | |
| திரு. கா. ஜெகதீஸ்வரன், அரசினர் பகுப்பாய்வுத் திணைக்களம், கொழு. | 500 | |
| திரு, சி. தணிகாசலபதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி | 500 | |
| திரு. ரி. குகதாசன் | 500 | |

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| செல்வி, ஆர்: குலசேகரம்பிள்ளை: | 500 | |
| வைத்தியகலாநிதி கே. பத்மநாதன், மயிலணி, சுன்னுகம் | 500 | 250 |
| வைத்தியகலாநிதி கே. சந்திரசேகரம், அளவெட்டி | 500 | 100 |
| செல்வி. ச. சுப்பிரமணியம், இளவாலை வடக்கு. இளவாலை | 500 | 250 |
| திரு. ஏ. கே, நடராசா சிறுப்பர், காகித ஆலைக் கூட்டுத்தாபனம் - - வாழைச்சேனை | 500 | |
| திரு. ரீ, குமாரவேற்பிள்ளை, காகிதஆலைக் கூட்டுத்தாபனம் - - வாழைச்சேனை | 500 | |
| திரு. இ: கந்தையா, | 500 | 150 |
| வைத்தியகலாநிதி (திருமதி) கு: பொன்னம்பலம், தெல்லி கிழக்கு - - தெல்லிப்பழை | 500 | 100 |
| திரு: இ. முத்துக்குமாரு, | 500 | 100 |
| திரு. எஸ். பரராசசிங்கம், மாதகல் | 500 | |
| திரு. வி. நமோலிங்கம், தேவாலய முன்றில் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் | 500 | |
| திரு. எஸ். மகேந்திரன், | 500 | |
| வைத்தியகலாநிதி மு. கணேசன், கணேசவில்லா, தெல்லிப்பழை | 500 | |
| திரு, பி. தேவராசா, விவசாய நிலையம் கரடியனுறு | 500 | 100 |
| திரு. வி. சிறிஸ்கந்தராசா, மாவிட்டபுரம் தெல்லிப்பழை | 500 | |
| திரு. வி. சொக்கலிங்கம், உதவி அரசாங்க அதிபர். நானுட்டான் | 500 | |
| வைத்திய காலாநிதி நா. சிவசுப்பிரமணியம், கருகம்பனை - - காங்கேசன்துறை | 500 | |
| திரு. நா. இரத்தினசிங்கம், கொல்லங்கலட்டி, தெல்லிப்ழை | 500 | 250 |
| திரு. எஸ். கந்தசாமி, | 500 | |
| திரு. ரீ. இராசேந்திரம் | 500 | |
| திரு: எஸ். விக்கினராசா | 500 | |
| திரு: ஆ. விமலச்சந்திரன், 314, இரணி வீதி, கொழும்பு 3: | 500 | |
| திரு. ச, திருஞானசம்பந்தமூர்த்தி, மயிலிட்டி தெற்கு, தெல்லி. | 500 | |
| செல்வி. பி, பொன்னமபலம், தாவரவியற்பகுதி, பேராதனை வளகம் - - பேராதனை | 500 | |
| திரு, கே. சிவராசா, பேராதனை வளாகம், பேராதனை | 500 | |
| திரு, ப: பாலசிங்கம், மயிலிட்டி தெற்கு, தெல்லி | 750 | |
| திரு. எஸ். கோபாலசாமி, அளவெட்டி, வடக்கு அளவெட்டி | 500 | |
| திரு. சி. சண்முகநாதன் | 500 | |
| திரு. ப.ஜோசப் இரத்தினராசா 18, டீனஸ்ரன் பிளேஸ் கொழும்பு 3. | 500 | 250 |
| திரு. வி, இரத்தினகோபால், அம்பனை, தெல்லிப்பழை | 500 | |
| திரு. வி. கணேசன், திருகோணமலை | 500 | |
| திருமதி ஏ. கனகசபை, கட்டுவன்சந்தி, தெல்லிப்பழை | 500 | |
| திரு. மு. சரவணமுத்து, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை | 500 | 400 |
| திரு: எம், ஏ பீ. இரத்தினம், 26-மறெற்றீற்றேட், கொழும்பு | 500 | 400 |
| திரு. வி. விஜயகுமார், தெல்லி கிழக்கு, தெல்லிப்பழை | 501 | 301 |
| திரு. ஆ. மகாலிங்கசிவம், விழிசிட்டி, தெல்லிப்பழை | 500 | 280 |
| வைத்தியகலாநிதி எஸ். இரவீந்திரன், மார்பு வைத்தியநிலையம்- - மயிலிட்டி | 500 | 250 |
| திரு. பி. செல்வநாயகம், சொல்லங்கட்டி, தெல்லிப்பழை | 500 | |
| திரு. த. நடேசன், விறுத்தலைவிளான், தெல்லிப்பழை | 500 | |
| திரு. என். சிவபாலகணேசன், மாத்தனை, தெல்லிப்பழை | 500 | 250 |
| திரு. த. இலங்காநேசன், மயிலிட்டி, காங்கேசன்துறை | 500 | |
| வைத்திய கலாநிதி திருமதி எஸ்: பத்மநாதன், | 500 | |
| ,, செல்வி கே. நடராசா, | 500 | |
| திரு. ரீ. பாவநாசசிவம், | 500 | |
| திரு. ஆர். புவநேந்திரன, கிருஷ்ணகிரி, சுன்னுகம் | 500 | |
| திரு. சி. எஸ். அருள்பிரகாசம, பலாலி தெற்கு, வயாவிளான் | 501 | 300 |
| திரு. நா. கணேசமூர்த்தி, கருகம்பனை, காங்கேசன்துறை | 500 | |

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| திரு. ரீ. தங்கராசா, | 300 | |
| திரு. ரி. துரைராசசிங்கம், L 93, அம்பாறை | 300 | 250 |
| திரு. கே. சிறீரங்கநாதன், | 300 | |
| திரு. எஸ். கவிராசசேகரம், ஸ்ரேசன் வீதி, தெல்லிப்பழை | 300 | |
| திரு. என், ஜெகதீஸ்வரன், | 300 | 60 |
| திரு. ஆர். இரத்தினராசா | 300 | |
| திரு. கே. கணேசரத்தினம், தெல்லிப்பழை | | 300 |
| திரு. கே. யோகரத்தினம், தெகிவல | 300 | |
| திரு. கே. நித்தியசுந்தரேஸ்வரன், வைரவ புளியங்குளம், வவுனியா | 300 | |
| திரு. கே. புண்ணியமூர்த்தி, | 300 | |
| திரு. கே. உமாமகேஸ்வரன், வறுத்தலைவிளான், தெல்லிப்பழை | 300 | |
| திருமதி எ. கணேசமணி, கட்டுவன் | 300 | |
| திரு. நா. தவநாதன், மகிழடி, தெல்லிப்பழை | 300 | |
| திரு. எஸ். பாலசுப்பிரமணியம், | 300 | |
| திரு. சி. அ. சிவபாதம், யாழ் வளாகம், திருநெல்வேலி | | 300 |
| திரு. ஏ. கணேசலிங்கம் | 300 | |
| திரு. சி. சிவயோகநாதன், டச்சுரோட், தெல்லிப்பழை | 300 | |
| திரு. ஏ. சி. செய்யது இஸ்மயில், 25, காசில் வீதி, பொரளை | 300 | |
| திரு. வ, பொன்னம்பலம், மாவை தெற்கு, தெல்லிப்பழை | | 300 |
| திரு. எம். இராசசுந்தரம், | 300 | |
| திரு. என். லோகநாதன் | 300 | |
| திரு. பி, பாலசுந்தரம் | | 300 |
| திரு, ப. குலசிங்கம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 300 | |
| திரு. எஸ். வரப்பிரகாசம், 8, இரத்தினகார பிளேஸ், தெகிவளை | | 300 |
| திரு. சீ. அருணாசலம், விழிசிட்டி, தெல்லிப்பழை | | 300 |
| திரு. சு. இந்துதாசன், குரும்பசிட்டி ,, | 300 | |
| திரு. சு. சந்திரசேகரம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | | 300 |
| திரு. சி. வரதன், செருக்கப்புலம் ,, | 300 | 100 |
| திரு. சி. யேசுதாசன், அச்சுவேலி | | 400 |
| திரு. ஏ. கே. கணேசரத்தினம், ஜமுனா, தெல்லிப்பழை | | 300 |
| திரு. ஆர். கே. வைரவநாதன், ஏழாலை மத்தி | | 300 |
| திரு. ஏ. எம். அப்துல்காதர், ச. நி, 3-ம் வட்டாரம், வாழைச்சேனை | | 350 |
| திரு. எச். முகிதீன் 4-ஆம் வட்டாரம் வாழைச்சேனை | | 250 |
| திரு. என். கனகேஸ்வரன், மல்லாகம் | 300 | |
| திரு. இ. சுந்தரலிங்கம், மல்லாகம் | 250 | |
| திரு. ரீ, மகேந்திரா | 250 | |
| திரு. ஏ. சகாதேவன் | 250 | |
| திரு. எஸ், சபாரத்தினம், உடுவில் கிழக்கு, உடுவில் | 250 | 50 |
| திரு, நா, கணேசபிள்ளை, பத்தைமேனி, அச்சுவேலி | 250 | 50 |
| திரு. எஸ். தவராசா, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 250 | 100 |
| திரு, கே. ஜீவரத்தினம் | | 250 |
| திரு. வி. சிற்றம்பலம், 2-ம் ஆம் கட்டை, மன்னார் | 250 | |
| திரு. எஸ். கந்தசாமி, | 250 | |
| திரு. ஆர். தளையசிங்கம், பஞ்சகிரி, தெல்லிப்பழை | 250 | 175 |
| திரு, கே. இராமசாமி, | 250 | |
| திரு. செ. சிவபாலன், 40, நெல்சன் பிளேஸ், கொழும்பு 6, | | 250 |
| திரு. கே, காசிப்பிள்ளை, பன்னாலை, தெல்லிப்பழை | 250 | 50 |
| திரு, எஸ். ஜெகதலப்பிரதாபன், 17/2, ஸ்ரேசன் வீதி, வெள்ளவத்தை | | 250 |
| திரு. மு. குமாரசாமி, 5-ம் வட்டாரம், அனலைதீவு | 250 | 50 |
| திரு, வ. சின்னத்துரை, 2-ம் ,, ,, | 250 | 50 |
| திரு. பிரான்சிஸ் செல்வராசா, பத்தைமேனி, அச்சுவேலி | 250 | 200 |
| திரு., சி. அமுதலிங்கம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை | | 250 |
| வைத்தியகலாநிதி ரீ. திருச்செல்வேல், குரும்பசிட்டி | | 250 |
| திரு. சி. சண்முகநாதன், செல்லங்கட்டி, தெல்லி. | | 250 |

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| திரு. க. திருநாவுக்கரசு, பன்னாலை, தெல்லிப்பழை | | 250 |
| திருமதி. ஜெருட், ஊர்காவற்றுறை | 250 | 100 |
| திரு. பொ. வை. நடராசா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி | | 250 |
| திரு, ரீ. காங்கேசு, சாவகச்சேரி வடக்கு | 250 | 150 |
| திரு. ஏ. சிவலோகநாதன், மாத்தனை, தெல்லிப்பழை | | 250 |
| திரு. கே. ஜீவரத்தினம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | | 250 |
| திரு. வி. தவமணி, ,, ,, | | 250 |
| திரு. எம். தர்மரத்தினம், 4-ம் வாய்க்கால் கிளிநொச்சி | | 250 |
| திரு. கே. கனகரத்தினம், இராசவீதி, அச்சுவேலி | | 250 |
| திரு. எம். பிச்சை, கிளிநொச்சி | | 250 |
| திரு. எஸ். சித்தியானந்தன், வீமன்காமம் | | 200 |
| திரு. கே. தில்லையர், கயர்தப்பை, தெல்லிப்பழை | | 200 |
| திரு. கே. சிவானந்தன், பன்னாலை தெல்லிப்பழை | | 200 |
| திரு. எம். சபாரத்தினம், குரும்பசிட்டி | 200 | |
| திரு. பீ. வேலும்மயிலும், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி | 250 | |
| திருமதி என். பூதப்பிள்ளை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் | | 250 |
| திருமதி, ஆர். சின்னராசா, தெல்லிப்பழை | | 250 |
| திரு, எஸ். செகராசசிங்கம், தெல்லிப்பழை | | 250 |
| திரு. எஸ். லக்ஷ்மிநாதன் தெல்லிப்பழை | | 250 |
| திரு. எஸ். சண்முகலிங்கம், ஆதி மயிலிட்டி | 250 | |
| திரு. நா. திருபாலசிங்கம், பன்னாலை, தெல்லிப்பழை | | 250 |
| திரு. பி. நடராசா, 102 செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. | 200 | 125 |
| திரு. கா. சுப்பிரமணியம் விழிசிட்டி, தெல்லிப்பழை | | 200 |
| திரு. வி. இராசதுரை, வறுத்தலைவிழான் | 200 | |
| திரு. எஸ். சதாசிவம் | 200 | |
| திரு. கி. வடிவேலன் | 200 | 75 |
| திரு. வீ. ரீ. சுப்பிரமணியம், பண்டாரிகுளம், வவுனியா | 200 | 100 |
| திருமதி சி. பரமநாதன், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | 200 | |
| திரு. எம். பாலசிங்கம், தெல்லிப்பழை | | 200 |
| திரு. க, துரைசிங்கம், பன்னாலை, தெல்லிப்பழை | 200 | |
| திரு. த. கனகரத்தினம், 30 பசல்ஸ் றேட், கொழும்பு 6 | 200 | |
| திரு. வி. திருநாவுக்கரசு | 200 | |
| திரு. எஸ். தில்லைநடராசா | 200 | |
| திரு. என். நாகராசா, வயாவிளான் | 200 | |
| திருமதி ரீ, தங்கநாதன் | 200 | |
| திரு. க. த. பாலசுப்பிரமணியம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை | 200 | 50 |
| திரு. எஸ். ஏரம்பமூர்த்தி 'இரகுபதி' பன்னாலை ,, | | 200 |
| திருமதி கோகிலா மகேந்திரராசா, விழிசிட்டி ,, | | 200 |
| திருமதி த. சண்முகநாதன், விழிசிட்டி | | 200 |
| திரு. இ. சபாரத்தினம், சித்தம் தெல்லி கிழக்கு, தெல்லிப்பழை | | 200 |
| திரு. என். சர்வேஸ்வரா, வவுனவத்தை ,, | | 200 |
| திரு. எஸ். அருளானந்தசிவம், வவுனவத்தை ,, | 200 | |
| திரு. வே. குகப்பிரகாசம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | | 200 |
| திரு. த. சீ. அப்புத்துரை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | | 200 |
| திரு. எஸ். பொன்னுராசா, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை | 200 | 100 |
| திரு. ஏ. மகாசிவம், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 200 | 100 |
| திரு. எஸ். தர்மசீலன் ,, ,, | 200 | 100 |
| திரு. எஸ். சின்னத்தம்பு, பன்னாலை, தெல்லிப்பழை | | 200 |
| திரு. சி. ந. சிங்கராசா, குரும்பசிட்டி, தெல்லிப்பழை | | 200 |
| திரு. க. சின்னையா, மாவிட்டபுரம் | 200 | |
| திருமதி பி. இராசரத்தினம், தெல்லிப்பழை கிழக்கு | 200 | |
| திரு. கோ. இரத்தினம், அளவெட்டி வடக்கு | 200 | |
| திரு. கே. வைத்தியநாதசர்மா, மயிலணி | 200 | |
| திரு. அ. சிவசம்பு, மல்லாகம் | 200 | |

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| வைத்தியகலாநிதி மு. வேதாரணியம், மல்லாகம் | 200 | |
| திரு. பொ. சிவசுப்பிரமணியம் | 200 | |
| திரு. பொ. கந்தசாமி, அளவெட்டி | 200 | 100 |
| வைத்தியகலாநிதி பி. நடராசா, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | | 150 |
| திரு. கா, கதிர்காமத்தம்பி, விழிசிட்டி, தெல்லிப்பழை | 150 | |
| திரு. கே. சிவபாலரத்தினம், 45/24 பீற்றர் சன் லேன், கொழும்பு 6 | 150 | |
| திரு. க. துரைராசா, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | 150 | |
| திரு. சீ. அரியகுணராசா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி | 150 | |
| திரு. அ. குமரகுரு, சட்டத்தரணி. காங்கேசன்துறை | | 150 |
| திருமதி சு. அழகம்மா, மயிலிட்டி தெற்கு. தெல்லிப்பழை | | 150 |
| திரு. எஸ். தம்பிப்பிள்ளை ,, ,, | 150 | 50 |
| திரு. சி. செல்வரத்தினம், விழிசிட்டி ,, | 150 | 100 |
| திரு. த. ஜெயசிவன், பன்னாலை, ,, | | 150 |
| திரு. கே. சிவலிங்கம் | 100 | |
| திரு. கே. செல்லத்துரை | 100 | |
| திரு. வி. பாலசுப்பிர்மணியம், தெல்லிப்பழை கிழக்கு | 200 | 100 |
| திரு. என். கே. சுப்பிரமணியம், வயாவிளான் | | 200 |
| திரு. கே. விஜயகுமார் | 100 | 15 |
| திரு. எம். ஜெகதீசன் | 100 | |
| திரு. எஸ், கிருஷ்ணசாமி | 100 | |
| திரு. எஸ். சிவானந்தம் | 100 | |
| திரு. கே. கணேசரத்தினம் | 100 | |
| திரு. எம். மகேஸ்வரன் | 100 | |
| செல்வி கே. நாகலிங்கம் | 100 | |
| திரு. கே. திருச்சிற்றம்பலம் | 100 | |
| திரு. இ. இராஜநாயகம் | 100 | |
| செல்வி அ. சண்முகம், பன்னாலை, தெல்லிப்பழை | | 100 |
| செல்வி எஸ். கந்தவனம், கருகம்பனை, காங்கேசன்துறை | | 100 |
| திரு. கே. மயில்வாகனம் | 100 | |
| திரு. பி. அகஸ்தியர், அளவெட்டி | 100 | |
| திரு. சி. நடராசா | 100 | |
| திரு. எஸ். கந்தசாமி | 100 | |
| திரு. எஸ். தியாகராசா | 100 | |
| திரு. வி. பாலசுப்பிரமணியம் | 100 | |
| திரு. என். சிவகுமாரன் | 100 | |
| திரு. பி. இளையதம்பி | | 100 |
| திரு. ரீ. சிவனேந்திரன் | | 100 |
| திரு. ஏ. கணேசலிங்கம் | 100 | |
| திரு. ஆர், சுகுணசபேசன் | 100 | |
| திரு. எம், சண்முகசுந்தரம் | | 100 |
| திரு. கா. செல்லையா, சத்திநிகேதனம், பலாலி | 100 | |
| திரு. த. ஜெயரத்தினம், தெல்லிப்பழை கிழக்கு | 100 | |
| திரு. எஸ். கனகசபை, விழிசிட்டி, தெல்லிப்பழை | | 101 |
| திரு. பி. நடராசா, பன்னாலை, ,, | | 100 |
| திரு. எம். பகீரதன் | 100 | |
| திரு. கே. வி. கந்தசாமி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை | | 100 |
| திரு. மு. இராமலிங்கம், குரும்பசிட்டி, தெல்லிப்பழை | | 100 |
| திரு. எஸ். வேலுப்பிள்ளை, புங்குடுதீவு | | 100 |
| திரு. கே. சிவகுரு, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | | 100 |
| திரு. பி. முருகேசு ,, ,, | 100 | 50 |
| திரு. பீ. பாலசுப்பிரமணியம் மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை | | 100 |
| திரு. சி. கனகசுந்தரம், குரும்பசிட்டி, ,, | 100 | 50 |
| திரு. ஏ. அருளானந்தன், மயிலிட்டி தெற்கு, ,, | | 100 |
| திரு. கே. சின்னத்துரை ,, ,, | | 100 |
| திரு. பொ. பாலசுப்பிரமணியம், ,, ,, | | 100 |

| | | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| திரு. ஆர். நாகலிங்கம், குரும்பசிட்டி, | ,, | | 100 |
| திரு. எஸ். சிவராசா, மயிலிட்டி தெற்கு, | ,, | | 100 |
| திரு. எஸ். சின்னத்துரை, குரும்பசிட்டி, | ,, | | 100 |
